Not for sale

மார்ச் - ஏப்ரல் 2014

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## நினைவுகூறுதலின் பிரதிபலிப்புகள்

நினைவுகூறுதலுக்கான ஆயத்தம் • புறம்பே எறிதல்

சோதனைகள் இலாபகரமானதா இல்லை விரயமாக்கபடுகிறதா?

வெள்ளைக்கல் பரணி • கிறிஸ்துவுக்குள் நற்பலன்கள்

யூதா கோத்திரத்தின் பால சிங்கம் • ஆறுதலின் ஊழியம்

**நினைவுகூறுதலின் பிரதிபலிப்புகள்**

# ஆதியிலே



பஸ்கா நாட்கள் நெருங்கியபோது, கடைசிமுறையாக இயேசு எருசலேமுக்கு, அவர் சிலுவையில் மரிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு வந்தார். நான்கு சுவிசேஷங்களிலும் மூன்றில் ஒரு பகுதி இயேசுவின் கடைசி வாரத்தைக்குறித்தே பேசுகிறது. அந்த வாரத்தின்போது, அவருடைய மரணத்திற்காக தம்முடைய சீஷர்களை விசேஷித்தவிதமாக இயேசு ஆயத்தப்படுத்தினார். அந்த வாரத்திற்குரிய பல பாடங்கள், ஆண்டவரைப் பின்பற்றக்கூடிய நமக்கு அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கு பேறுதவியாய் இருக்கிறது.

"நினைவுகூறுதலுக்கான ஆயத்தம்" என்ற தலைப்போடு, இப்பிரதியை துவங்குகிறோம், இக்கட்டுரை இயேசுவின் கடைசி இரவின்போது, நினைவுகூறும்படி சொல்லப்பட்ட காரியங்களைக் கொண்டுள்ளது. அப்பம் மற்றும் பாத்திரத்தின் விசேஷ முக்கியத்துவம் நம்முடைய இருதயத்தின் ஆயத்தமாய் இருக்கிறது.

நினைவுகூறுதலின் அடையாளங்கள், பஸ்காவின் நிழல்கள் மற்றும் விசேஷமாக நம்முடைய இருதயங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டிய புளிப்பைப் பற்றி, "புறம்பே எறிதல்" என்ற தலைப்பு விவரிக்கிறது.

கிறிஸ்தவ வாழ்க்கை பல ஆசீர்வாதங்களைக் கொண்டிருந்தாலும், நம்முடைய குணலட்சணங்களை சுத்திகரிப்பதற்கு பல சோதனைகளும் கொடுக்கப்படுகிறது. "சோதனைகள், இலாபகரமானதா இல்லை விரயமாக்கப்படுகிறதா" என்ற தலைப்பு, சோதனைகளினால் வரும் அதிகபட்சமான பாடங்களுக்குரிய செயல்முறை ஆலோசனைகளைக் கொடுக்கிறது. இதன் வழியாக, தேவன் தேடும் தம்முடைய குமாரனுக்கேற்ற மணவாட்டியாக நாம் அனைவரும் பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக மாற்றப்படுவோம்.

இயேசு, தம்முடைய மிக நெருக்கமான சீஷர்கள் மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவோடு தம்முடைய கடைசி வாரத்தில் அதிகபட்சமான நேரத்தை செலவழித்தார். ஒருவேளை, அந்த வாரத்தின்போது, மரித்தோரிலிருந்து லாசருவை எழுப்பினஅந்த மிகப்பெரிய அற்புதத்தை இயேசு நடத்தியிருக்க வேண்டும். அந்த வாரத்தில் நடைப்பெற்ற காரியங்கள் மற்றும் நமக்குரிய விசேஷித்த முக்கியத்துவங்களைக்குறித்து "வெள்ளைக்கல் பரணி" என்ற தலைப்பு ஆராய்கிறது.

கிறிஸ்துவை பின்பற்றுவதற்கு நாம் முடிவு செய்தபின் நாம் பெறக்கூடிய பலவகையான ஆசீர்வாதங்களைக்குறித்து, "கிறிஸ்துவுக்குள் நற்பலன்கள்" என்ற தலைப்பு விவரிக்கிறது. அவைகளில் நாம் பெறக்கூடிய மிகச்சிறந்த நன்மைகள் - நம்முடைய புத்திக்கு ஏற்றவாறு பெறக்கூடிய யேகோவா தேவனைப்பற்றிய அறிவாகும். மேலும், அவருடைய பிரசன்னமானது, நம்மை இந்த யுகத்தின் சின்ன சின்ன பராமரிப்புகளுக்கு மேலாக அழைத்துச் செல்கிறது.

சமாதானமான இராஜ்யத்தில் சிங்கமும், ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயக்கூடிய பிரபலமான வரைப்படம் ஏசாயாவின் தீர்க்கதரிசன புஸ்தகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இரட்சிப்பின் முழுமையான சித்திரத்தின் ஒரு பகுதியாக, சிங்கத்தையும், ஆட்டுக்குட்டியையும் வெளிப்படுத்தின புத்தகத்தில் காணலாம். "யூதா கோத்திரத்தின் பால சிங்கம்" என்ற தலைப்பு, இயேசுவுக்குள் இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தை ஆராய்கிறது.

மற்றவர்களின் பலிகளுக்கு உதவி செய்யும்விதத்தில் நம்முடைய கிறிஸ்தவ பங்கை "ஆறுதலின் ஊழியம்" என்ற தலைப்பு ஆராய்கிறது. கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக நாம் நம்முடைய சக கிறிஸ்தவர்களை ஊக்குவித்து உதவி செய்கிறோம்.

இந்த நினைவுகூறுதலின் காலம் நம்முடைய அனைத்து வாசகர்களுக்கும் ஆசீர்வாதமாய் இருக்கக்கடவது.

**மார்ச் - ஏப்ரல் 2014**


**நினைவுகூறுதலுக்கான ஆயத்தம்** 2
ஒரு விலையேறப்பெற்ற அனுசரிப்பு

**புறம்பே எறிதல்** 7
விசுவாசிகள் சுத்திகரிக்கப்படுதல்

**சோதனைகள் இலாபகரமானதா இல்லை விரயமாக்கப்படுகிறதா?** 12
அனுபவங்களின் மதிப்பு

**வெள்ளைக்கல் பரணி** 19
விலையேறப்பெற்ற வெகுமதி

**கிறிஸ்துவுக்குள் நற்பலன்கள்** 23
ஐசுவரியமுள்ள பலன்கள்

**யூதா கோத்திரத்தின் பால சிங்கம்** 28
ஐசுவரியமுள்ள பலன்கள்

**ஆறுதலின் ஊழியம்** 37
துக்கிப்பவர்களின் விடுதலை

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 42

விலையேறப் பெற்ற ஒரு அனுசரிப்பு

# நினைவுகூறுதலுக்கான ஆயத்தம்

"என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள்" (லூக். 22:19).



Ray Charlton

இந்த முழு மனுக்குலத்திற்காகவும், நமக்காகவும் ஆண்டவர் தந்திட்ட மாபெரும் பலியை இந்த நினைவுகூறுதலின் காலத்தில் ஞாபகப்படுத்திக் கொள்வது ஏற்றதாயிருக்கிறது. அவர் சிலுவையில் பட்டப்பாடுகளையும், வாழ்க்கையின் கடைசி மணி நேரங்களில் பட்ட வேதனையையும் மட்டுமே நாம் சிந்தியாமல், அவருடைய ஊழியத்தின் முழு வாழ்க்கையையும் குறித்து சிந்திக்கிறோம். மேலும், கிறிஸ்து நமக்காக செய்த யாவற்றையும் ஆழமாக உணர்ந்து, அதற்காக நன்றிகளை ஏறெடுக்கக்கூடிய காலமாகவும் இது உள்ளது.

அனைவரும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், இயேசு துவக்கி வைத்த முதல் நினைவுகூறுதலின் நாளே, இறுதி பஸ்கா போஜனமாக ஆண்டவர் சீஷரோடு புசித்தார். இஸ்ரயேல் ஜாதி எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அற்புதமாக விடுவிக்கப்பட்டார்கள் என்றும், எகிப்து தேசத்தின் மேல் கடந்த மரணத்தீர்ப்பிலிருந்து இஸ்ரயேலின் தலைச்சன் பிள்ளைகள் மீட்கப்பட்டார்கள் என்பதை பஸ்கா நேரத்தில் நினைவுகூறப்பட்டது.

"நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன்" (லூக். 22:15) என்று மேல்வீட்டறையில் அனைத்தும் ஆயத்தமானபோது, நம்முடைய ஆண்டவர் தம்முடைய சீஷர்களை இவ்வாறு கூறி அழைத்தார். இறுதி மணி நேரங்களில் அவர் பட வேண்டிய பாடுகளையும், அடைய வேண்டிய மரணமும் சமீபித்திருப்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார். அவருக்காகக் காத்துக் கொண்டிருந்த உபத்திரவங்களையும், துக்கங்களையும் பற்றி அறிந்திருந்தாலும், அது தேவனுடைய சித்தமே என்றும் அறிந்திருந்தார். தேவனுடைய சித்தத்தின் இந்த பகுதியும் கூட செய்வதற்கு அவர் ஆயத்தாக இருந்தார்.

நாமும்கூட நம்முடைய ஆண்டவரின் மகத்தான பலியை சகோதரர்களோடு ஒருமித்து பிரதிபலிக்கவும், பரலோக தந்தையிடம் நம்மை மறுபடியும் ஒப்படைத்து, உண்மையான விருப்பத்தோடு நினைவுகூறுதலின் காலங்களில் கூடி வரவேண்டும். "நீங்கள் இதைப் பானம்பண்ணும்பொடிதல்லாம் என்னை நினைவுறும்பழ இதைச் செய்யுங்கள்" (1 கொரி. 11:25) என்ற வார்த்தை கற்பனையாகக் கொடுக்கப்படாமல், ஒரு விண்ணப்பமாக நமக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. நினைவுகூறுதலின் ஆராதனையில் நாம் கலந்துகொள்ள இயலாதபோது, தண்டனைக்குரிய பயமுறுத்தல்களை நாம் பெறுவதில்லை என்ற வார்த்தைகள் மட்டுமே கூறப்படுகிறது.

நினைவுகூறுதலின் காலத்தில் இயேசுவின் மரணம் மற்றும் ஜீவனுக்குரிய உயிர்த்தெழுதலைக் குறித்த நன்மைகளில் நாம் பங்குக்கொள்ளும்போது, அது ஐக்கியத்தையும், புத்துணர்வையும் பெற்றுக்கொள்ளும் காலமாக இருக்க வேண்டும். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா- நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா-" (1 கொரி. 10:16).

அந்த முதல் நினைவுகூறுதலின் இரவு, பஸ்கா பிரமாணத்தின் பண்டிகைக்கு ஒரு முடிவைக்கொண்டு வரவேண்டும். காரணம், பஸ்கா பிரமாணம் வரக்கூடிய நிஜத்திற்கு நிழலாய் இருந்தது. "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே" (1 கொரி. 5:7). இறுதியாக, நம்முடைய ஆண்டவர் தம்மை பலி செலுத்தினபின், பழைய பஸ்காவை, அவருடைய சீஷர்கள் அனுசரிக்க வேண்டிய அவசியமில்லாமற்போனது. அவைகளை அடையாளப்படுத்தும் சகல காரியங்களையும் கிறிஸ்து இப்பொழுது நிறைவேற்றினார்.

**அடையாளங்களின் முக்கியத்துவம்**

புளிப்பில்லா அப்பம் மற்றும் பாத்திரமாகிய நினைவுகூறுதலின் அடையாளங்களில் சுற்றியிருக்கும் சூழ்நிலைகளை நம்முடைய நினைவுக்குக் கொண்டுவரலாம். இவைகள் தம்முடைய சரீரத்தையும், சிந்தக்கூடிய இரத்தத்தையும் அடையாளப்படுத்தும் என்று இயேசு கூறினார். அவர் நன்றிகளை ஏறெடுத்துக்கொண்டு, "இதை வாங்கிப் புசியுங்கள் இது என் சரீரமாயிருக்கிறது" என்று கூறினார். அடையாளமாகக் காட்டப்பட்ட அந்த அப்பம் அவருடைய மாம்சத்தைக் குறிப்பிட்டது என்ற ஆண்டவருடைய வார்த்தை பொருள்படுகிறது. ஆனால், இயேசுவினால் கொடுக்கப்பட்ட அப்பம் உண்மையான சரீரத்திற்கு அடையாளமாக இருந்தபடியினால் அந்த அப்பம் பலியிடப்படாமல் அவருடைய சரீரம் பலியிடப்பட்டது.

"வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம்" (யோவா. 6:33). "ஜீவஅப்பம் நானே? என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" (யோவா. 6:35). "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம் ; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்" நான் கோடுக்கும் அப்பம் உலகத்தின் ீவனுக்காக நான் கோடுக்கும் என் மாம்சகூம" (யோவா. 6:51) என்று இயேசு முன்னதாகவே கூறினார்.

நாம் புரிந்துகொண்டவர்களாக இராப் போஜனத்தில் கலந்துகொள்வதற்கு அந்த அப்பம் எதை முக்கியத்துவப்படுத்துகிறது என்பதை உணர்ந்துகொள்வது மிக அவசியமாய் உள்ளது. ஆண்டவரின் விளக்கத்தைப் பொறுத்தவரையில், பிட்கப்பட்ட அப்பம் நமக்காகப் பலியிடப்பட்ட அவருடைய மாம்சமே. அவர் மனுஷனாக வருவதற்கு முன் இருந்த நிலைமையில் பலி செலுத்தவில்லை. அவர் பரிபூரண மனுஷனாகவும், பாவமற்றவராகவும், பரிசுத்தராயும், பாவத்திற்கு விலகினவராகவும், ஆதாமின் வம்சத்திற்கு இரட்சகரானார். "எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது" (1 தீமோ. 2:3-6).

பாவிகளுக்காகக் கொடுக்கப்பட்ட நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் மனித இயல்பு கறையற்றதும், பரிசுத்தமாயும் இருந்தது. மரணத்தீர்ப்பைப் பெற்ற முழு மனுக்குலம் பூரணநிலைக்குத் திரும்பி, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பைப் பெறும்படி அவருடைய பரிபூரண மனுஷ இயல்பு பலியாகக் கொடுக்கப்பட்டது.

ஆயினும், ஆதாமின் சந்ததியிலுள்ள யாவரும் இயேசுவின் பலியினால் நன்மையைப் பெறுவதற்கு இயேசு கல்லறையிலிருந்து உயர்த்தப்பட்டு, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத். 28:18) என்ற அதிகாரத்தை அவர் பெற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. அவர் பிதாவினிடத்திற்கு ஏறி சென்று, அவருடைய பலியின் மரணத்தின் கிரயத்தை கிருபாசனத்தண்டையில் சமர்ப்பித்தார். இவைகளை நம்முடைய பரலோக தந்தை முழுமையாக அங்கீகரித்தார்.

"ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு" (ஏசா. 9:6) என்ற பட்டங்களோடு இயேசு இந்த முழு மனுக்குலத்திற்கு அறியப்படும்பொழுது, தேவன் இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் கொடுக்கப்பட்ட வல்லமை முழுமையாக செயலாற்றப்படும். அப்பொழுது, "தாவீதின் சிங்காசனத்தையும் அவருடைய இராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத் தினாலும். நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசா. 9:7). இயேசு தம்முடைய சபையோடு தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராக ஆட்சி செய்யும்பொழுது, மனுக்குலத்தை மீண்டும் தேவனோடு ஒப்புரவாக்கி அவர்களை பூரண நிலையைப் பெறும்படி உதவி செய்வார். அப்பம் ஈடுபலியின் சிறப்பான பரிசை அடையாளப்படுத்துகிறது - மனுஷனாகப் பிறந்த

யாவருக்கும் - நித்திய ஜீவனைப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பு.

நமக்காக அவருடைய இரத்தம் மரிக்கும் வரையில் ஊற்றப்பட்டது. ஏனெனில், சபை மற்றும் முழு மனுக்குலமும் இரட்சிக்கப்படுவதற்காக இயேசு இரத்தம் சிந்த வேண்டியது அவசியமாயிருந்தது. அவருடைய ஊழியத்தின் முழு காலத்திலும் சிந்தப்பட்டு வந்த இரத்தம் சிலுவையில் முழுமையாக ஊற்றப்பட்டது. இதுவே, இயேசுவை மகிமையுள்ள ஆவிக்குரிய ஜீவியாக உயிர்த்து எழுப்புவதற்கு அனுமதித்தது. மேலும், சபை மற்றும் முழு மனுக்குலத்திற்கு தம்முடைய ஈடுபலியினால் பெற்ற ஜீவனுக்குரிய நன்மைகளை அவர்களுக்குக் கொடுக்கும்படியான வல்லமையும் பெற்றார். "முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்" (1 கொரி. 15:45).

**அடையாளங்களின் ஆழமான பொருள்**

ஆயிரம் வருஷம் ஆட்சியில் கீழ்ப்படிதலினால் உலகம் நீதிமானாக மாற்றப்படுவதற்கு முன்னதாகவே, இந்த சுவிசேஷ யுகத்தில் விசுவாசத்தினால் சபை நீதிமானாக்கப்படுகிறது. இப்பொழுது, கிறிஸ்துவின் ஈடுபலியை நன்கு உணரக்கூடியவர்களுக்கு தங்களையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கான வாய்ப்பளிக்கப்பட்டு, ஆண்டவராம் இயேசுவின் சரீர அங்கங்களாக மாற்றப்படுவதற்கு வாய்ப்பளிக்கிறது.

நினைவுகூறுதலின் ஆழமான பொருள் நேரடியாக இயேசுவினால் குறிப்பிடப்படவில்லை. பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் அவருடைய சீஷர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. "இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவா. 16:12-13).

இந்த சத்தியத்தின் ஆவியே, பிதா தம்முடைய பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்ட வல்லமையும், செயல்பாடுமாய் இருந்தது. இந்த அடையாளங்களின் ஆழமான பொருளை தெளிவாகப் புரிந்துகொள்ள அப்போஸ்தலனாகிய பவுல், "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிற தல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (1 கொரி. 10:16-17) என்று உடன்படிக்கை செய்த சபைக்கு எழுதினார்.

நாம் பெற்ற நீதிமானாக்கப்பட்ட நிலை ஆண்டவரின் பலியினால் பெற்றோம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாய் இருந்தது. தெய்வீக கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், முழு சபையும் இயேசுவாகிய தலையின் கீழிருக்கும் ஒரே சரீரம் என்பதை உணர்ந்துகொள்வது மிக அவசியமாய் உள்ளது (1 கொரி. 12:12-14). அதிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் ஆண்டவராம் இயேசுவின் ஒரு மாதிரியாக அவருடைய பலியில், அவருடைய அடிச்சுவடுகளில் நடப்பது மிக அவசியமானது. பிதாவின் நோக்கத்தின்படி, இயேசு தம்முடைய ஜீவனை யூத சகோதரர்களுக்கு மட்டுமல்ல, பிதாவின் நோக்கத்தின் படி இந்த முழு உலகத்திற்கும் கொடுத்ததுபோல, நம்முடைய ஜீவனை நம்முடைய சகோதரர்களுக்காக கொடுப்பதின் வழியாகவே நாம் இவைகளை செயல்படுத்த முடியும். ஒரே அப்பத்தில் பங்குப்பெறக்கூடிய தேவ ஜனங்களைக் குறித்த பவுலின் வாக்கியம் எவ்வளவு அழகாகவும், வல்லமையாகவும் இருக்கிறது. ஆனால், இயேசுவின் இரத்தமே அவருடைய பலியின் நன்மையே நம்மை இரட்சிக்கிறது.

திராட்சரசம் நிரம்பிய பாத்திரம் பலி செலுத்துவதற்காக சிந்தப்படுகிற அவருடைய ஜீவன், அவருடைய இரத்தத்தை அடையாளப்படுத்துகிறது என்பதை நம்முடைய ஆண்டவர் தெளிவாகக் கூறுகிறார். பாவங்களுக்காக

அவருடைய ஜீவன் ஊற்றப்பட்டது என்று கூறுகிறார். அவருடையவர்கள் நிச்சயமாக அதை பானம் பண்ண வேண்டும். விசுவாசத்தினால் அவருடைய பலியை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்கு வெளியே இருந்து, எந்தவகையிலும் இந்த ஜீவனை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. நியாயப்பிரமாணத்தின் கீழ்ப்படிதலின் விளைவினாலும் இந்த ஜீவனைப் பெற இயலாது. இயேசுவின் இரத்தத்தின் வழியாக மட்டுமே ஒருவர் நித்திய ஜீவனைப் பெற முடியும். ஏனெனில், இந்த முழு உலகத்தின் பாவத்திற்காக அவருடைய பலியை ஈடுகிரயமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப். 4:12).

அதுபோல, இந்த ஒரே அப்பத்தில் பங்குப்பெறாவிட்டால், புதிய சுபாவத்தைப் பெற்றுக்கொள்ள வேறுவழியில்லை - ஆண்டவருடைய ஈடுபலி மேலும், பலியின் ஜீவியமாகிய அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கான ஆண்டவரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு இவ்விதமாய் ஞானஸ்நானத்தின் மூலம் அவரோடு கூட அடக்கம் பண்ணப்பட்டால், அவருடைய மகிமையான உயிர்த்தெழுதலிலும், கனத்திலும், அழியாமையிலும் பங்கு பெறுவோம் (ரோ.6:3-5; 2:7).

**இயேசுவை நினைவுகூருதல்**

நினைவுகூருதலில் பங்கெடுக்கக்கூடிய சிறப்புரிமையை இலேசானக் காரியமாக நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்" (1 கொரி. 11:26-28).

"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடேஅல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1 கொரி. 5:7-8) என்றும் பவுல் குறிப்பிடுகிறார்.

இப்பொழுது, "இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத். 26:29). ஆண்டவர் நமக்களித்திருக்கும் வாக்குத்தத்தத்தை எதிர் நோக்கியிருக்கலாம்.

# புறம்பே எறிதல்



David Rice

"சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே. 4:31-32).

இயேசு நமக்காக எதை பலி செலுத்தினார் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்வதே நினைவுகூறுதலின் காலம். இப்படி செய்வதினால் மாம்ச இஸ்ரயேலர்கள் பஸ்காவைப் புசித்த சம்பவத்தில் கொடுக்கப்பட்டுள்ள அடையாளங்கள் எவ்வாறாக இயேசுவினால் நிறைவேற்றப்பட்டது என்று சகோதரர்கள் பொதுவாக பிரதிபலிப்பார்கள். நித்திய ஜீவனைப் பெறும்படி,"மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ண வேண்டும்" (யோவா. 6:53) என்று இயேசு கூறும்பொழுது - நம்முடைய ஈடுகிரயமாக இயேசு கிறிஸ்துவின் பலியைப் பெற்றுக்கொண்டால், கீழ்ப்படியாமையினிமித்தம் வந்த மரண சாபத்திலிருந்து நாம் விடுவிக்கப்படுவோம் என்பதை பொருள்படுத்தினார்.

உண்மையில் இயேசு பயன்படுத்தின அடையாளங்கள் மிகத் தெளிவாக உள்ளது. ஜீவனைப் பெறுவதற்கு நாம் அவருடைய மாம்சத்தைப் புசிக்க வேண்டும் - இயேசு நமக்காக தந்திட்ட ஜீவனுக்குரிய மதிப்பை நாம் சரியாகப் புரிந்துகொண்டால் மட்டுமே நித்திய ஜீவனைப் பெற முடியும். இயேசுவை நம்முடைய இரட்சகர் என்று நம்பிக்கைக் கொண்டவர்களாக விசுவாசத்தை செயலாற்றி அவர் காண்பித்த தேவனுடைய கோட்பாடுகளின்படி நடக்க ஒப்புக்கொள்ள வேண்டும்.

அக்காலத்தில், "மனுஷக்குமாரனுடைய மாம்சத்தைப் புசிப்பது" என்ற உருவகம் புரிந்துகொள்ள சற்று கடினமாக இருந்திருக்க வேண்டும். இவ்வாக்கியத்தைக் கூறுவதற்கு முன் இயேசு மற்ற வாக்கியங்களைக் கூறி ஜனங்கள் புரிந்துகொள்ள சற்று இலகுவாக்கினார். தேவன் வனாந்தரத்தில் இஸ்ரயேல் ஜனங்கள் சாகாதபடிக்கு கொடுக்கப்பட்ட மன்னாவைக்குறித்து நினைப்பூட்டி, "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்" என்று இராப்போஜன காலத்தின் போது, ஆண்டவர் இவ்வார்த்தைகளைக் கூறினார். "ஜீவ அப்பம் நானே" (யோவா. 6:48). வெகுசீக்கிரத்தில் இஸ்ரயேலர்கள் பஸ்கா ஆட்டின் மாம்சத்தைப் புசிக்கக்கூடியவர்களாய் இருந்தனர். ஆகவே, நிஜமான பஸ்கா ஆட்டைக்குறித்து, அறிமுகப்படுத்து வதற்கு அக்காலம் ஏற்றதாய் இருந்தது. அவர்களுடைய இரட்சிப்புக்காக இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், இயேசுவின் மனுஷ இயல்பை ஈடுகிரயமாக ஆவிக்குரிய போஷாக்கைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை புரிந்துகொள்ள வேண்டியதாயிருந்தது.

அடுத்ததாக, இயேசு அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவதைக்குறித்து பேசினார். அது உண்மையில் யூதர்களுக்கு கடினமான காரியமாக இருந்தது. ஏனெனில், நியாயப்பிரமாணத்தின்படி குறிப்பாக இரத்தத்தைப் புசிக்க வேண்டாம் என்ற கட்டளையைப் பெற்றிருந்தனர். (லேவி. 17:10) இவ்வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு இயேசுவை போதகராக விசுவாசித்து அவர் சொல்லும் வார்த்தைகளின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். அந்நேரத்தில் இருந்த பார்வையாளர்கள் இயேசுவை தங்கள் இராஜா என்று கோரிக்கொண்டிருந்தனர் (யோவா. 6:15). ஆகவே, இயேசு அவர்களின் உண்மையான விசுவாசத்தை அறிந்தவராக நிஜத்தைக்குறித்த காரியத்தை விவரித்தார்.

சிந்திக்கக்கூடியவர்கள் இயேசு சொன்ன அடையாளங்களை உள்வாங்கியிருந்தால், எந்த குழப்பத்திலும், அவ்வார்த்தைகள் ஊடுருவிச் சென்றிருக்கும். இரத்தத்தில் ஜீவன் இருப்பதினால் அது பரிசுத்தமாகக் கருதப்பட்டது என்று லேவி. (17:11-)ல் விவரிக்கிறது. இப்படியாக, இந்த உலகத்தை இரட்சிப்பதற்காகக் கொடுக்கப்படும்

மனுஷக்குமாரனுடைய "இரத்தம்" ஜீவனை அடையாளப்படுத்தக்கூடியதாய் இருக்கிறது. மற்றொரு தருணத்தில் இயேசு இக்காரியத்தை நேரிடையாகக் கூறினார். மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல்... தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் (மத். 20:28).

அவர் கொடுக்கும் ஈடுகிரயத்தினிமித்தமே இரட்சிப்பு வெளிப்படும் என்ற இந்த குறிப்பை வலியுறுத்துவதற்கு அவருடைய இறுதி இரா விருந்தை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தினார். அத்தருணத்தில் அவர் அனுப்பிய அந்த அப்பத்தை "என்னுடைய சரீரம்" என்றும், பாத்திரத்தைக் கொடுக்கும் பொழுது, "என்னுடைய இரத்தம்" என்றும் அவர் விவரித்தார். (மத். 26:26, 28) இவை அனைத்தும் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப்பின் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டது.

**பஸ்காவின் அடையாளங்கள்**

எகிப்தைவிட்டு இஸ்ரயேலர்கள் புறப்படு வதற்கு ஆயத்தப்பட்டபோது, அவர்கள் எகிப்தில் தங்கின கடைசி இரவின்போது பஸ்கா ஆட்டைப் புசித்தார்கள். அங்கு அடிக்கப்பட்ட அனைத்து ஆடுகளும் இயேசுவை அடையாளப்படுத்தியது. மேலும், இயேசு நமக்காகக் கொடுத்திட்ட அவருடைய ஜீவனைப் பெறுவதற்கு அடையாளமாக அனைவரும் அந்த பஸ்கா ஆட்டைப் புசித்தார்கள். இந்த உலகத்தின் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் மீட்பைப் பெறவேண்டுமேயானால், பஸ்கா ஆடாகிய இயேசுவின் சரீரத்தை நாம் புசிக்க வேண்டும்.

அன்று அடிக்கப்பட்ட ஆட்டின் இரத்தத்தை நிலைவாசல்களின் மேற்சட்டத்திலும், இரண்டு பக்கத்திலுள்ள நிலைக்கால்களிலும் தெளித்து, இஸ்ரயேலர்கள் அதில் குடியிருப்பதையும், பஸ்கா ஆட்டை புசித்து, அந்த இரத்தத்தினால் அவர்கள் மூடப்பட்டதையும் வெளிப்படுத்தியது. அந்த இரத்தம் இயேசுவின் இரத்தத்தை அடையாளப்படுத்தும். இப்படியாக, கடைசி இராப்போஜனத்தின் போது, இயேசு பேசின அந்த இரண்டு முக்கியமான அடையாளங்களும், பஸ்கா நிழலில் உள்ள அடையாளங்களை மூடியது.

ஆனால், மற்ற ஒப்பந்தங்களும் இருந்தன. இஸ்ரயேலர்கள் அந்த பஸ்காவை பயணத்திற்கு ஆயத்தமாகப் பாதங்களில் பாதரட்சைகளைத் தொடுத்தவர்களாகவும், தடிகளைப் பிடித்துக்கொண்டு, கசப்பான கீரையோடும், புளிப்பில்லாத அப்பத்தோடும், சுட்ட மாம்சத்தை துரிதமாகப் புசிக்க வேண்டும் என்ற கட்டளையையும் பெற்றிருந்தார்கள். விருந்திற்குரிய மற்ற காரியங்கள் இயேசுவை அடையாளப்படுத்த வில்லை. நிஜமான விருந்தைக் கடைப்பிடிக்கக்கூடிய இயேசுவின் சீஷர்கள் பின்பற்ற வேண்டிய காரியங்களை இவைகள் அடையாளப்படுத்துகிறது.

"ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களா யிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும் படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடேஅல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1 கொரி. 5:7-8) என்றும் பவுல் இதை குறிப்பிடுகிறார்.

**எபேசியர் 4:31**

(எபே. 4:31)-ல் கூறப்பட்ட பவுலின் வார்த்தைகள், (1 கொரி. 5:7-8)-ல் கொடுக்கப்பட்ட ஆலோசனைக்கு ஒத்திருக்கிறது. ஆயினும், இவைகள் தனிப்பட்ட நபர்களுக்கு மிக முக்கியமானது. வசனங்கள் கூறுகிறபடி கொரிந்து சபையில், அவர்கள் தங்களை சுத்திகரிக்கும்படி அவர்களுடைய பாவச்செயல்களை பவுல் குறிப்பிடுகிறார். ஆனால், அவர்கள் தங்களுடைய செயலுக்கு மனம்வருந்தி, தங்களை சுத்திகரித்துக் கொண்டார்கள் என்று பவுல், கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் காணலாம் (2 கொரி. 2:6-11).

ஆயினும், (எபே.4:31)-ல், எபேசு சபையில் தனிப்பட்ட ஒவ்வொரு சகோதரர்களுக்கும் ஆலோசனையாகக் கொடுக்கப்பட்டது. நம்முடைய இருதயத்திற்குள் மறைந்திருக்கும் "புளிப்பை" அகற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம் - கசப்பு, வைராக்கியம், கோபம், புறங்கூறுதல், தீமையான பேச்சுக்கள், பேரிரைச்சல் போன்ற காரியங்கள் நமக்குள் காணப்படாதபடிக்கு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

சகோதரர்களின் இருதயத்தில் இப்படியாக நடக்க வேண்டும் என்பதற்கு அதிகபட்சமான நன்மைகள் உண்டு. கனிவும், அன்பும் கிறிஸ்தவர்களை குறிக்கக்கூடிய ஒரு அடையாளமாயிருக்கிறது. இதையே நம்முடைய இயல்பான வழக்கமாக எதிர்பார்க்கப்பட வேண்டும்.

ஆயினும், மற்ற குணங்களிலிருந்து நாம் சுத்திகரிக்கப்பட்டாலும், சில கோபங்கள், சில குணங்களை மேற்கொள்வதற்குக் கடினமான காரியங்களாக இருக்கலாம். இயல்பாகவே, சிலர் அன்பாகவும், இரக்கமாகவும் இருக்கலாம். சிலர் கோபம் மற்றும் எதிர்த்து நிற்கும் ஆவியை கொண்டவர்களாகவும் இருக்கலாம். இப்படிப்பட்ட தேவையற்ற குணங்களை நம்மால் முடிந்தவரை, குறைத்துக் கொண்டால் மட்டுமே, நம்முடைய கூடுகைகளில் நிறைவான ஆவியைக் கொண்டு இவைகளை முழுமையாக வெளியேற்ற முடியும்.

கோபம் மென்மேலும் தூண்டப்பட்டால் இதன் விளைவாக கசப்பு ஏற்படும். குற்றம் சாட்டப்பட்டதின் விளைவாக இது ஏற்படலாம். அவைகளை கண்டுபிடிப்பது மிக கஷ்டம். அவைகளை கண்டுபிடித்துவிட்டால், அதை வேரோடு பிடுங்குவது இன்னும் கஷ்டமானக் காரியம். அதை வளர்த்துக்கொள்ளுவதற்கு அதிக காலம் பிடிக்கும். ஆனால், அது மற்றவர்களின் பார்வையில் ஒரு குறிப்பிட்ட அடையாளத்தை காட்டக்கூடியதாய் இருக்கும். இப்படிப்பட்ட அடையாளங்களை மாற்றுவது மிகக் கடினமான காரியம்.

**இவைகளை நாம் எவ்வாறு மேற்கொள்வது? இங்கு சில ஆலோசனைகளைக் காணலாம்**

(1) கசப்புகளை எழுப்பக்கூடிய சில சூழ்நிலைகள் அல்லது சுற்றுப்புறங்களை ஒருமுறையாவது தவிர்க்க வேண்டும். இதன் வழியாக சிந்தையிலுள்ள கோபங்கள் குறைந்து மிதமான எண்ணங்கள் நிரப்பப்படும். மேலும், குற்றம் புரிந்தவரை சாந்தமான முறையில் கருத்தில் கொள்ள வேண்டும்.

(2) சம்பந்தப்பட்ட மனுஷனைப்பற்றிய உங்கள் எதிர்பார்ப்புகளை சற்று தாழ்த்திக் கொள்ளுங்கள்.

(3) இந்த சூழ்நிலையை மற்றவர்கள் எவ்வாறு அதிகமான அழுத்தமில்லாமல் கையாளுவார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

(4) கசப்பானவைகளை குறைக்கும்படியாக காலத்தின் மதிப்பைக் கண்டுகொள்ள வேண்டும்.

(5) உங்களால் முடிந்ததை செய்வீர்களானால் சமாதானமாயிருங்கள். எல்லா சூழ்நிலைகளையும் நம்மால் சரி செய்யமுடியாது.

மற்றவர்களால் பாதிக்கப்படாததுபோல, (பாதிக்கப்பட்டிருந்தாலும்) அவர்களிடத்தில் நாம் நடந்துகொள்ளும் பட்சத்தில் நம்முடைய சிந்தை அங்கீகரித்தப்படியே நடந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நேர்மையான சிந்தைகள், நம்முடைய மனதை ஒருநிலைப்படுத்தி சரியான பாதையில் செல்லும். நம்முடைய இருதயத்தின் பாரத்தோடு நம்முடைய ஆசீர்வாதங்களைப் பிரதிபலிப்போமே யானால் - "நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்கள் ஒவ்வொன்றையும் எண்ணிப்பாருங்கள்" இதுவே சரியான முறையாகும். கோபமும், புறங்கூறுதலும் - நன்றியறிதலுக்கும், அன்பிற்கும் முரண்பாடானது.

எந்தவிதத்திலும் கசப்பு நம்முடைய உள்ளத்தில் தொடர்ந்து நிலைநிற்க அனுமதிக்கக்கூடாது. இதை நிச்சயமாக நம்மால் கட்டுப்படுத்த முடியும். இயேசு, யூதாசை பொறுத்தவரையில், கசப்பை மனதில் கொண்டிருந்தாரா?

**புளிப்பை வெளியே அகற்றுதல்**

பஸ்காவின் காலத்தில் இஸ்ரயேலர்கள் ஏழு நாட்கள் புளிப்பில்லா அப்பங்களைப் புசித்தார்கள். "புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளில்தானே புளித்தமாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும்" (யாத். 12:15). அக்காலத்தில், புளிப்புள்ள அப்பங்களைப் புசியாமல் இருப்பதுமட்டுமல்ல, கூடுதலாக அந்த ஏழு நாட்களில் ஒருவரும் சோதனைக்கு உட்படாதபடிக்கு வீட்டிலுள்ள எல்லாவிதமான புளிப்பையும் வெளியே எறிந்துவிட வேண்டியது அவசியமாயிருந்தது. வீட்டிலிருக்கும் புளிப்பைத் தேடி அவைகளை வெளியே எறிந்துவிடுவதற்கு மிகுந்த மேற்பார்வையும், முயற்சிகளும் எடுக்கப்பட்டன.

புளிப்பை வெளியேற்றுவது - நம்முடைய தீய கனிகளை தவிர்க்க வேண்டும் என்று இயல்பாக

எடுத்துகொள்ள முடியாது. நம்முடைய சிந்தனைகள், நோக்கங்கள், உணர்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். இரக்கமுள்ள உணர்வுகளினால் சிந்தனைகள் எழும்புகிறதா? மற்றவர்களுக்குரிய நன்மையைக்குறித்து நம்முடைய இருதயம் ஆர்வம் காட்டுகிறதா? நம்முடைய அந்தஸ்து உயர்ந்த நிலையில் உள்ளதா? இவைகளை கண்காணிப்பதினிமித்தம் சில நல்ல விளைவுகளைப் பெறலாம். வளர்ச்சிக்குத் தேவைப்பட்ட குணங்களை நாம் கண்டறியும்போது, அவைகளுக்கு தேவையான கவனம் செலுத்தலாம். இப்படிப்பட்ட காரியங்களின் வழியாக நம்முடைய முன்னேற்றத்தை அதிகரித்துக்கொள்ளலாம்.

மற்றவர்கள் அடையாத போதிலும் நமக்கு மகிழ்ச்சியைத் தருவதற்கு இது ஒரு இனிமையான பயிற்சியாகும். சிந்தனைகளை நாம் சற்று குறைத்துக் கொண்டாலும் சரியான பாதைகளில் செல்பவர்களாக இருப்போம். நமக்குள் இருக்கும் உண்மையான மதிப்பை அது வெளிப்படுத்தும்.

நம்முடைய முயற்சிகளை கசப்பு அல்லது கோபமான சிந்தனைகள், இருளின் கிரியைகள் மற்றும் நடத்தை ஆகிய மூன்று காரியங்களை பவுல் (எபே. 4:32)-ல் குறிப்பிடுகிறார். இதற்கு மாறாக இரக்கம், கனிவான இருதயம் மற்றும் மன்னிப்பு நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும். முதல் காரியம், மற்றவர்களிடம் நாம் நடந்துகொள்ளும் விதத்தையும், இரண்டாவதாக, நம்முடைய அன்பான நடத்தையினிமித்தம் மற்றவர்களிடம் வெளிப்படுத்தக்கூடிய நல்ல உணர்வுகளின் வளர்ச்சியையும், மற்றும், மூன்றாவதாக, தவறுகளினிமித்தம் பட்டபாடுகளிலிருந்து விடுதலைப் பெறுவதாகும்.

பொதுவாக, புதிய ஏற்பாட்டில் மன்னிப்பு என்ற வார்த்தைக்கு எபிமி (aphiemi) என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அனுப்பப்படுதல் என்று பொருள் - அதாவது, நம்முடைய சிந்தையில் விடுவிக்கக்கூடிய மற்றவர்களைக் குறித்ததான தவறான எண்ணங்களை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கும் பகையையும், முழுமையாக கைவிட வேண்டும் என்பதே பொருளாகும்.

(எபே. 4:32)-ல், பவுல் பயன்படுத்தின வார்த்தை சற்று வித்தியாசமாக உள்ளது. ஹரிஸோமய் (charizomai) என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வெறுமையாக விடுவிப்பதைக் காட்டிலும் இன்னும் முன்னேறி செல்லக்கூடிய ஆவியை இது குறிக்கக்கூடியதாய் இருக்கிறது. "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." இந்த இரண்டு வார்த்தைகளும் தாராளமான ஆவியை குறிப்பிடுகிறது.

சில நேரத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இப்படிப்பட்ட ஆவியைப் பெற்றிருந்து, குற்றம் சுமத்தினவர்கள் அவர்களிடத்தில் மனந்திரும்பி வருகையில் அவர்களை குறைவாக மதிப்பிடுகிறார்கள். நாம் இப்படியாக இருக்கலாகாது. நாம் காண்கிறபடி, ஒரு குற்றவாளி தன்னுடைய நடத்தையை காண்பது மிகக் கடினமானக் காரியம். அதற்கும் மேலாக அதை உணர்ந்து தன்னுடைய குற்றங்களுக்காக மனம் வருந்தி திருத்திக் கொள்வது அதைவிட கடினமான காரியமாகும். இப்படிப்பட்ட முயற்சிகளை நாம் துவக்கத்தில் கண்டால், சரியான திசையில் இப்படிப்பட்ட முயற்சிகள் எடுக்கப்படுவதை நாம் காணும்போது, அவர்களுடைய முயற்சிகளை உற்சாகப்படுத்தும் வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். இப்படிப்பட்ட கிரியைகளுக்கு நாம் இசைந்து செயல்படுவதை மற்றவர்கள் காணும்போது, அவர்களும் இப்பாதையில் செல்ல முயற்சிப்பார்கள். ஒருவேளை, அவைகள் சரியான முடிவு பெறாவிட்டாலும், இப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்ததினால் நம்முடைய இருதயங்களில் சமாதானம் நிலவும்.



# சோதனைகள், இலாபகரமானதா இல்லை விரயமாக்கப்படுகிறதா?

"வெள்ளியைக் குகையும், பொன்னைப் புடமும் சோதிக்கும்; இருதயங்களைச் சோதிக்கிறவரோ கர்த்தர்" (நீதி. 17:3).

Adapted from a discourse by John T.Read

பூமியிலிருந்து எடுக்கப்பட்ட பொன்னையும், வெள்ளியையும் அவைகளிலுள்ள அசுத்தங்களிலிருந்து சுத்திகரிப்பதற்கு அவைகள் நெருப்பில் இடப்படுகிறது. அதுபோல, பொறி பறக்கும் சோதனைகள் நம்முடைய குணலட்சணங்களிலுள்ள அசுத்தங்களை சுத்திகரிக்கிறது. நமக்குள் இருக்கும் அசுத்தங்களை அதுவரையில் நாம் அறியாதிருக்கிறோம். ஆகவே, "தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்" (சங். 139: 23-24) என்று தாவீது ஜெபித்தார்.

தேவனுடைய பிரமாணத்தை மீறுவதினால் ஏற்படும் பாவ பழக்கத்தின் விளைவாக உபத்திரவங்களும், வேதனைகளும் நேரிடுகிறது. ஆயினும், இவைகள் தேவனுடைய தண்டனைகள் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை அல்லது தேவனிடத்திலிருந்து நேரடியாக அறிவிப்பைப் பெறாமல், எந்த ஒரு வியாதிக்கும் தெய்வீக மீறுதலே காரணம் என்று கூறமுடியாது.

யோபு சந்தித்த உபத்திரவங்கள், பாடுகள் மற்றும் இழப்புகள் அனைத்தும் தனக்கு நேரிட்ட அநீதி என்று தவறாகப் புரிந்து கொண்டார். அவருடைய நண்பர்கள் யோபு மறைவான குற்றங்களை செய்திருக்க வேண்டும் என்று அவரை ஒப்புக்கொள்வதற்கு முயற்சித்தார்கள். ஆகவே, தேவனுக்கு முன்பாக மனம்வருந்தி, காரியங்களை அறிக்கை செய்தால், இழந்ததை மீண்டும் பெறுவாய் என்று கூறினார்கள். ஆனால், தேவனுக்கு முன்பாக யோபின் இருதயம் நேர்மையாகவும், அவருடைய கிரியைகள் நீதியுள்ளதாயும் இருந்தது என்று யோபு அறிந்திருந்தார். இப்படியிருக்க, அவர் தண்டிக்கப்பட்டதின் காரணம் என்ன? ஏன் இந்த துன்பம்?

தொடர்ந்து யோபு, மிகவும் குழப்பமடைந்து தன்னுடைய காரியங்களை தேவனுக்கு முன் வைப்பதற்கு வாய்ப்புகளை விரும்பினார். அவர்களுடைய சிநேகிதர்களின் வார்த்தைகள் அவருடைய உபத்திரவங்களை மேலும் அதிகரித்தது. முடிவில், சில முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொள்ளும்படியாக இந்த சோதனைகள் அனுமதிக்கப்பட்டதை அவர் நன்கு புரிந்துகொண்டார். மேலும், அவருடைய குணலட்சணங்களில் குறைவானவைகளில் வளர்ச்சியடைந்தார். தேவன் எதை செய்தாலும் சரியான காரியங்களைச் செய்வார் என்பதையும் உணர்ந்தார். யோபு, இக்காரியங்களை உணர்ந்த பின் தேவன் அவருக்கு வாய்ப்பு கொடுத்தபோது, அவர் தேவனிடத்தில் சொல்லுவதற்கு ஒன்றுமில்லாமல் போனது.

பத்மு தீவிலிருந்த யோவானுக்கு லவோதிக்கேயா சபையைக்குறித்து இயேசு கூறின செய்தியானது, "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன். நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்; நான்: நீ ஐசுவரியவானாகும் படிக்கு நெருப்பிலே புடமிடபட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திகொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" (வெளி. 3:15-18).

சுவிசேஷ யுகத்தின் முடிவிலுள்ள இந்த சபை சுயத்தை பலி செலுத்தி, தங்களுடைய பொருத்தனைகளை உன்னதமானவருக்கு செலுத்த துரிதப்படுத்துகிறார்கள். திவ்விய சுபாவத்தை எப்பொழுதும் பொன் அடையாளப்படுத்தக்கூடியதாய் இருக்கிறது. இங்கு, இந்த பொன் தெய்வீக சித்தத்தையும், தெய்வீக குணங்களின் வளர்ச்சியையும் சித்தரிக்கிறது. "நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா?" (எபி. 12:7-9) என்று பவுல் கூறுகிறார்.

**சோதனைகளின் நோக்கம்**

நாம் வளர்ச்சியடைந்து கிறிஸ்துவின் சாயலை முழுமையாக நமக்குள் ஸ்தாபிப்பதற்கு சோதனைகள் அனுமதிக்கப்படுகிறது. ஆகவே, அவைகளை நாம் நன்றியோடு பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் அவைகளை தவிர்க்க முயற்சித்தால் நம்முடைய சோதனைகள் விரையமாகிவிடும். வரும் சோதனைகளை தொந்தரவாக எண்ணி, அவைகள் நம்மை எரிச்சல் மூட்டக்கூடியதாக எண்ணினால் நம்முடைய சோதனைகளை விரயமாக்கக் கூடியவர்களாக இருப்போம்."எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (எபி. 12:11) என்று பவுல் கூறுகிறார். ஒருவேளை சரியான காரியத்தை தவறாகப் பழகிவிட்டால், சமாதானத்தையும் நல்ல சிந்தனைகளையும் வளர்ப்பதற்குப் பதிலாக - உபத்திரவங்கள் - முறுமுறுப்பையும், குறை கூறுதலையும், குற்றம் கண்டுபிடிப்பதையும் நமக்குள் வளர்ச்சியடைய செய்யும். ஆனால், சரியான முறையில் நாம் பயிற்சியைப் பெற்றோமேயானால் நம்முடைய எதிர்பார்ப்புகளைத் தாண்டி அதிகமான ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

நம்முடைய தேவைகளுக்கு ஏற்றப்படி சோதனைகளும் வேறுபடுகிறது. விசுவாசத்தின் சோதனைகளைக்குறித்து பேதுரு தம்முடைய முதலாம் நிருபத்தில் அதிகமாகப் பேசுகிறார். ("வெற்றியைப் பெறுவதற்கு ஆயத்தப்படும் பாடுகள்") என்று ஒரு விமர்சகர் கூறுகிறார். அதாவது, நம்முடைய சோதனைகளின் வழியாகவே நாம் சிறந்த வெற்றியைப் பெறமுடியும் என்கிறார். அக்காலத்திலும் அதை தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளிலும் கிறிஸ்துவின் விசுவாசமுள்ள சீஷர்கள் பல சரீர ரீதியான உபத்திரவங்களைச் சகித்தார்கள். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ. 3:12) என்று பவுல் தீமோத்தேயுக்கு கூறுகிறார்.

ஆதி கிறிஸ்தவர்களை இக்காலத்திலுள்ள கிறிஸ்தவர்களோடு ஒப்பிடுகையில் நாம் பெறும் சரீர ரீதியான சோதனைகள் மிகவும் குறைந்தே காணப்படுகிறது. வரக்கூடிய சில வருடங்களில் தேவனுடைய கரங்களிலிருந்து வரக்கூடியவைகளை நாம் அறியோம். நாம் எவைகளை சகிக்க வேண்டும் என்று இன்னும் அறியாதிருக்கிறோம். தேவனுடைய இராஜ்யத்தில் அவருடைய பரிசுத்தவான்கள் பிரவேசிப்பதற்கு விசுவாசத்திற்குரிய சோதனைகளில் முடிவுபரியந்தம் நிலைநிற்க வேண்டும். கிறிஸ்துவின் மகிமையில் பங்கு பெறுவதற்கு ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களுடைய தகுதியை நிரூபிக்கக்கூடிய வகையில் இந்த சோதனைகள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

"இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப் படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக வேலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1 பேது. 1:6-7). பெற்றுக்கொள்ளும் சோதனைகளை சரியாகப் பயிற்சி பெறுவதினால் இப்பலன்களைப் பெறலாம்.

சோதனைகளின் நோக்கத்தை உணர்ந்த அனைவரும் இந்த மாம்ச வாழ்க்கையில் ஏற்படும் உபத்திரவங்களையும், அசௌகரியங்களையும் நன்றியறிதலான உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ளும் போது, தெய்வீக வழிநடத்துதலினால் தெய்வீக சுபாவத்தில் வளர்ச்சிப் பெறுவோம்.

ஆவியில் நடத்தப்படும் யாவரும் அதிகமான கனிகளைக் கொடுப்பதற்கேற்றவாறு சோதனைகளும், உபத்திரவங்களும் அனுமதிக்கப் படுகிறது என்று இயேசு கூறினார். "நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்" (யோவா. 15:1-2). "இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள்" (1 பேது. 4:1) என்று பேதுருவும் உபத்திரவத்தின் நோக்கத்தைக்குறித்து பேசுகிறார்.

நம்முடைய மரணம் இயேசுவின் மரணத்தினால் கொடுக்கப்பட்ட ஈடுபலியில் பங்குபெறுவதில்லை என்று பேதுரு கூறுகிறார். மேலும், அவர் ஒரு பரிபூரண மனுஷனாக தெய்வீக நீதியின் தேவைகளை திருப்தியாக்கினார். அவர் கொடுத்த ஈடுபலிக்கு அவருடைய பாடுகளும், உபத்திரவங்களும் கூடுதலாய் இருந்தது. ஒரு இரக்கமுள்ள பிரதான ஆசாரியராக தம்முடைய குணநலன்களை வளர்ச்சியடைய செய்வதற்கு இவைகள் அனுமதிக்கப்பட்டன.

"அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார். அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" (எபி. 2:16-18). ஆகவே, நாம் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுத்துக் கொண்டோமேயானால், இராஜ்யத்தின் வேலைகளைச் செய்வதற்கு அவருக்கு பொறுத்தமான ஊழியக் காரர்களாக இருப்போம். அவர் பாவத்தை வெளியேற்ற வேண்டிய அவசியமில்லாதிருந்தது. ஏனெனில், அவருக்குள் பாவமில்லை. ஆனால், அவர் பாவம் செய்வதற்கு சோதிக்கப்பட்டார் அல்லது தூண்டப்பட்டார். ஆனாலும், அவர் அவைகளை மேற்கொண்டு பாவத்திலும், சோதனையிலும் அகப்பட்டவர்களிடம் இரக்கம் காண்பிக்க அறிந்து கொண்டார்.

"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்;உங்களாலே மகிமைப்படுகிறார்" (1 பேது. 4:12-14) என்று மேலும் பேதுரு கூறுகிறார்.

இவ்வசனங்களில் கூறப்பட்டவைகளில் எவ்வளவு பொக்கிஷங்களை நம்முடைய இருதயத்திலும், சிந்தையிலும் குவித்துக் கொள்கிறோமோ, அவ்வளவாக விசுவாசத்திலும் நாம் உறுதிபடலாம். பரிசுத்தவான்கள் இப்படிப்பட்ட சோதனைகளைச் சகிக்கும் போது, நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் முன்னணியில் மகிழ்ச்சியோடும், கனத்தோடும், மகிமையோடும் காணப்படுவதற்கு தகுதி பெறுவார்கள். மாம்ச சரீரத்தில் இவைகள் இயலாத காரியம். நம்முடைய வகையறுக்கப்பட்ட வல்லமையானது, இயேசு சகல அதிகாரங்களுக்கு மேலாகவும், ஆளுகைக்கு மேலாகவும் பெற்றிருக்கும் மகிமையை நம்மால் இப்பொழுது முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. மேலும், எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தைப் பெற்று இந்த யுகத்தில் மட்டுமல்ல, வரக்கூடிய யுகா யுகங்களிலும் அவர் இப்படியாகவே செயல்படுவார். அவருடைய சரீர அங்கங்களும் கூட அவருடைய மகிமையில் பங்கடைவார்கள்.

### சோதனைகள் வரவேற்கப்பட வேண்டும்

தேவனுடைய சித்தம் மற்றும் அவருடைய நோக்கத்தின்படி நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் அடிப்படையில், பெறக்கூடிய மகிமையும், கனமும் முதலில் தேவனுக்கே உரியதாகும். இரண்டாவதாக, நம்முடைய ஆண்டவரின் விசுவாசம் மற்றும் ஜீவபலியை நமக்கு இந்த மகிமையையும், கனத்தையும் பெற செய்ததினிமித்தம் இவைகள் அவருக்கும் உரியதாய் இருக்கிறது. இறுதியாக, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி தெய்வீக கிருபையினாலும், பலத்தினாலும் சகலத்தையும் ஜெயம் பெற்ற பரிசுத்தவான்களுக்கே உரியதாகும்.

ஜெயம் பெறக்கூடியவர்களுக்குக் கொடுக்கப் படும் பரிசை நம்முடைய இலக்காக இப்பொழுது நாம் தேடுவதில்லை அல்லது தேவன் நமக்கு வாக்களித்திருக்கும் அளவிடப்படாத வெகுமதியை நாம் புறக்கணிப்பதாக பொருளுமல்ல. இப்படி செய்வோமேயானால் நாம் விசுவாசத்திலும், தேவனுடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதிலும் குறைவுள்ளவர்களாய் இருப்போம். கிறிஸ்துவை போல, மாறவேண்டும் என்பதே நம்முடைய இலக்கு. நம்மைக்குறித்து தேவன் சிந்திக்கக்கூடிய காரியமும் இதுவே. "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக் குள்ளே முதற்பேறானவராயிருக்கும் ' பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்;" (ரோ. 8:29) இந்த பாக்கியம் மிக தெளிவானதும், வகையறுக்கப்பட்டதும் மிக முக்கியமானதாகவும் இருப்பதினால், நம்முடைய சிந்தையில் இருக்கும் வசனங்களின் வரிசையில் இது முதலாவது இடம்பெற வேண்டும். நம்முடைய சோதனைகளை மகிழ்ச்சியோடும், விருப்பத்தோடும் ஏற்றுக்கொள் கிறோமா அல்லது நம்முடைய சோதனைகளை விரயமாக்குகிறோமா?

"அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து," (ரோ. 5:3) என்று பவுல் கூறுகிறார். அவர் மாம்சத்தில் பட்ட துன்பங்களினிமித்தம் மகிழ்ச்சியடைந்தார் என்று இது பொருள்படுகிறதா? பொறுமையின் பயிற்சி சோதனைகளுக்கு தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட பொறுமை அனுபவங்களைப் பெற செய்கிறது. இப்படிப்பட்ட அனுபவங்கள் உறுதியான நம்பிக்கையில் நிலைத்துநிற்க கற்றுக்கொடுக்கிறது. இவ்வாறு நம்பிக்கை அதிகரித்தால் தேவனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் முழுமையாக நிரப்பப்படும்.

ஆகவே, பேதுரு மற்றும் பவுலும் கூட நம்முடைய சோதனைகளின் நோக்கங்களைக் குறித்து, ஒரேவிதமாக ஒப்புக்கொள்கிறார்கள். "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர் களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது" (யாக். 1:2-4). யாக்கோபும் இவர்களை அதே கோணத்தில் பின்பற்றுகிறார். வரக்கூடிய சோதனைகள் மாம்சத்திற்கு மகிழ்ச்சியாக இராவிட்டாலும், அவைகளை நாம் பெரிதான ஆசீர்வாதங்களாக எண்ண வேண்டும். இப்படிப்பட்ட நல்ல குணங்களை நமக்குள் வளர்ச்சியடைய செய்வதை அறிந்தவர்களாக அவைகளைப் பொறுமையோடு சகிக்க வேண்டும். அப்பொழுது நம்மை அர்ப்பணிக்கக்கூடிய பல பாடங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிக்கலாம்.

எல்லா சோதனைகளும் ஒரேவிதத்தில் இருப்பதில்லை. நமக்கு வரக்கூடிய சோதனை நம்முடைய சகிப்பு தன்மைக்காக அனுமதிக்கப் படலாம். நம்முடைய பொறுமையை சோதிக்கப் படும்படியாக அனுமதிக்கப்படலாம். மீண்டுமாக நம்மை பற்றி சிந்திக்காமல், நம்மிடத்தில் அன்பு செலுத்தாதவர்களை அறிந்து அன்பு செலுத்துவதே உண்மையான போராகும். நாம் சோதிக்கப்படுவதற்கு பல வகைகள் இருக்கலாம். ஆயினும், எல்லா கோணங்களிலும் நம்முடைய விசுவாசமே சோதிக்கப்படும். ஏனெனில், நம்முடைய முழுமையான குணலட்சணங்கள் விசுவாசத்தின் அடிப்படையில் கட்டப்படுகிறது. விசுவாசமில்லாமல் ஒன்றும் முடியாது.

பவுலுக்கு ஏற்பட்ட பிரச்சனை, அவர் செய்யும் பணிக்கு இடையூராக இருந்ததினிமித்தம் அவர் மூன்று முறை ஜெபித்தார். ஆனால், தேவனுடைய கிருபை போதுமானதென்று அவருக்கு பதிலளிக்கப்பட்டது. ஆகவே, அப்போஸ்தலனாகிய பவுல், முழு உணர்வோடு - "அன்றியும், எனக்கு

வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்" (2 கொரி. 12:7-10) என்று கூறினார்.

இப்படிப்பட்ட ஆவியை அனைத்து கிறிஸ்தவர்களும் தங்களுக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டும். அனைவரும் தங்களுடைய மாம்சத்தில் பாடுகளை அனுபவிப்பதற்கு தங்களை அனுமதிப்பார்களோ இல்லையோ தெரியவில்லை. நம்முடைய மாம்ச சரீரத்தை புதிய சிந்தை எவ்வளவாய் கட்டுப்படுகிறதோ அவ்வளவாய் நம்முடைய சரீரங்களை நம்மால் கீழ்ப்படுத்த முடியும்.

தேவன், நமக்கு அனுமதிக்கும் பிரச்சனைகள் எதுவானாலும் சரி, நியாயமாக ஆவிக்குரிய நடத்துதலோடு நாம் அவைகளை அனுபவித்தால், தேவனுடைய பார்வையில் நாம் நிச்சயமாக அங்கீகரிக்கப்படுவோம் என்று பவுல் மற்றும் யாக்கோபு இருவருமே (ரோ. 5:3-5; யாக். 1:2-3) பேதுருவின் வார்த்தைகளுக்கு ஒப்புக்கொள்கிறார்கள்.

ஆண்டவருடைய மாதிரியைப் பெறாத போதிலும், தேவனுடைய பரிசுத்த ஆவி அவர்களை வழிநடத்தாதபோதிலும், நம்முடைய ஆண்டவரின் முதல் வருகைக்கு முன் அநேக புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசத்தினிமித்தம் பொறுமையோடு சகலத்தையும் சகித்தார்கள். சோதனைகளின் உள் நோக்கத்தை யோபு புரிந்துகொள்ளவில்லை. அவர் பட்ட பாடுகளும், அடைந்த வேதனைகளும் பாவம் மற்றும் தீமையான கிரியைகளின் தண்டனை என்று தனக்குள் சிந்தித்து மிகவும் குழப்பம் அடைந்தார். அவர் அநீதியான பலனைப் பெற்றதாக எண்ணி மிகவும் வேதனையடைந்தார்.

நம்முடைய ஆண்டவரின் சோதனைகள் முடிவில் அவருக்கு மிகக் கொடூரமாய் இருந்தது. "அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக். 22:44) என்று கெத்செமனே தோட்டத்தில் அவர் பட்ட வேதனையை லூக்கா கூறுகிறார். உடல் ரீதியான வேதனையும், மரணத்தையும் எண்ணி ஆண்டவர் இவ்வாறு வேதனைப்படவில்லை. ஏனெனில், இப்படிப்பட்ட பாடுகளை அவர் தயக்கமின்றி பயந்து ஒதுங்காமல் துணிவோடு சகித்தார் என்பதை நாம் அறிவோம். அவருடைய ஊழியம் விசுவாசத்தோடு நிறைவேற்றுவதிலே, அனைத்தும் அடங்கியுள்ளது என்பதை அவர் அறிந்திருந்தார். ஆயினும், அவருடைய ஜெபம் கேட்கப்பட்டது. "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு" (எபி. 5:7).

தேவன் எதிர்பார்த்தபடி ஆண்டவராம் இயேசு எல்லாவித சோதனைகளையும் நல்ல பலன்களை தரும்படியாக ஏற்றுக் கொண்டார். "சோதனைகள் அனைத்தும் பல கோடிகள் பெறும், அவைகளை ஒன்றும் விரயமாக்க வேண்டாம்" என்று கடந்துபோன சில அன்பான சகோதரிகள் கூறினதுபோல, நாம் பெறக்கூடிய எவ்வித அனுபவங்களானாலும் நன்றியறிதலுள்ள ஆவியோடு நாம் அவைகளை ஏற்றுக்கொள்வதற்கு ஆண்டவராம் இயேசு நமக்கு உதவி செய்வாராக. மேலும், புது சிருஷ்டிகளாகிய நாம் பூரணப்படுவதற்குத் தேவையான ஏற்ற பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கு நம்முடைய உண்மையான முயற்சிகளை அவர் ஊக்குவிப்பாராக.

விலையேறப்பெற்ற ஒரு பரிசு

# வெள்ளைக்கல் பரணி



"பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான். அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது" (யோவா. 12:1-3).

**Ernie Kuenzli**

நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வாரத்தில் நடந்த சம்பவங்களில் நினைவுகூறும்படியாக ஒரு முக்கியமான சம்பவம் எருசலேமிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள பெத்தானியாவில் நடைப்பெற்றது (யோவா. 11:18). எருசலேமுக்கு செல்லும் முன் இவ்விடமே இயேசுவின் இறுதி நிறுத்தமாக இருந்தது. நம்முடைய ஆண்டவரின் மரணம் மற்றும் உயிர்தெழுதலுக்கு முன் நடைப்பெற்ற கொந்தளிப்பான சில சம்பவங்கள் குறிப்பிடப்படுகிறது. அந்த இராத்திரி, புயலுக்கு முன் இருக்கும் அமைதியைப் போல நிசப்தமாயிருந்தது. இங்கு குஷ்டரோகியாகிய சீமோன் வீட்டில், மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவினால் கனத்திற்குரிய ஒரு விருந்தினராக இயேசு வரவேற்கப்பட்டார்.

**மார்த்தாள் மற்றும் மரியாளுடன் இயேசுவின் முதல் சந்திப்பு**

இயேசு எருசலேமுக்குச் சென்ற போது, இயேசுவையும், அவருடைய சீஷர்களையும் மார்த்தாள் தன்னுடைய வீட்டிற்கு வரும்படி அழைத்திட்டாள். அது மார்த்தாளின் வீடாக இருந்தபடியால், (1) மார்த்தாள் கணவனை இழந்திருந்தாள். (2) குஷ்டரோகியாகிய சீமோனின் வீடாக இருக்க வாய்ப்பில்லை என்ற காரியங்கள் காணப்படுகிறது. இயேசு அவள் வீட்டிற்குச் சென்றபோது, மரியாள் அவருடைய பாதத்தில் அமர்ந்து, அவருடைய உபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ, மற்ற வேலைகளை செய்து கொண்டிருந்தாள். இதைக்குறித்து மார்த்தாள் இயேசுவினிடத்தில் குற்றம்சாட்டினபோது, "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்" (லூக். 10:41-42) என்று பதிலளித்தார்.

மார்த்தாள், தனக்காகவும், தன்னுடைய சீஷர்களுக்காகவும் செய்திட்ட வேலைகளுக்காக குற்றம் சாட்டவுமில்லை, மார்த்தாளின் பலியையும், அன்பினால் அவள் செய்திட்ட வேலைகளையும் அவர் நன்கு உணர்ந்திருந்தார். ஆயினும், சத்தியத்தின் வார்த்தையாகிய அவருடைய செய்தியைக் கேட்பதற்காக, திறந்திருந்த இருதயங்களின் மேல் இயேசு கண்ணோக்கமாய் இருந்தார். அப்படிப்பட்ட இருதயத்தை மரியாளிடத்தில் இயேசு கண்டார். அதுபோல, சமாரியா ஸ்திரீயினிடத்திலும் இப்படிப்பட்ட வார்த்தைகளை நம்முடைய ஆண்டவர்கூறினார். "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்" (யோவா. 4:10). இப்படிப்பட்ட ஜீவ தண்ணீரை இயேசு மார்த்தாளுக்கும், மரியாளுக்கும் கொடுத்தார்.

இது ஒரு முக்கியமான பாடமாகும். தேவனுடைய பணி மிக முக்கியத்துவம் வாய்ந்தது. ஆயினும், உணவு மற்றும் தண்ணீரைக் கொடுப்பதைக் காட்டிலும் மேலானது. தேவனோடு இணைந்து செயல்பட்டு இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடப்பதாகும். தேவனுடைய ஊழியம் செய்வதற்கு ஜீவ தண்ணீராகிய சத்தியத்தின் வார்த்தைகள் நம்முடைய இருதயங்களில் ஒளி ஏற்றி சரியான பாதையில் பணி செய்து நமக்கு தேவையான ஆவிக்குரிய வளர்ச்சியையும், பலத்தையும் கொடுக்கக்கூடியதாய் இருந்தது.

**லாசருவின் மரணம்**

(யோவா. 11:1-3)-ல், முதன்முதலாக லாசரு காணப்படுகிறார். லாசரு வியாதிப்பட்டு இருக்கிறார் என்பதை, மார்த்தாள் மற்றும் மரியாள் தூது

அனுப்பினார்கள். இயேசு, பெத்தானியாவுக்கு விரைந்து சென்று லாசருவை சொஸ்தப்படுத்து வதற்குப்பதிலாக, மேலும், லாசரு மரிக்கும்வரைக்கும் இரண்டு நாட்கள் அங்கு தங்கினார். அதற்குப் பின் லாசரு மரணமடைந்து நான்கு நாட்களுக்குப் பின் அவர்கள் அனைவரும் பெத்தானியாவுக்கு வந்தனர் (யோவா. 11:5, 39).

பெத்தானியாவுக்கு வருமுன் மார்த்தாள் இயேசுவை சந்தித்தாள். "மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து: ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" (யோவா. 11:21) என்ற வார்த்தைகளை வாசிக்கும்போது, அவளுடைய வார்த்தைகளில் காணப்பட்ட ஏமாற்றத்தை நாம் நன்கு அறியலாம். இயேசு பரலோக தந்தையோடு நெருங்கிய உறவு கொண்டிருந்ததினால், லாசரு மரிப்பதற்கு முன் இயேசு வந்திருந்தால் அவனுடைய வியாதியை சொஸ்தப்படுத்துவார் என்று மார்த்தாள் உறுதியாக நம்பினாள் "இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்" (யோவா. 11:22) மரித்துப்போன தன்னுடைய சகோதரனை உயிரோடு எழுப்பும்படி மார்த்தாள் இயேசுவிடம் விண்ணப்பித்தாளா?

மார்த்தாள் உயிர்த்தெழுதலை விசுவாசித் தாள். ஆயினும், அந்த வாக்குத்தத்தத்தை இயேசுவினிடத்தில் அவள் இணைக்கவில்லை. ஆகவேதான், இயேசு, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவா. 11:25) என்று கூறினார். உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய ஜீவன் இயேசுவின் வழியாக மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அவர் உறுதிப்படுத்தினார். மார்த்தாள் இயேசுவின் வார்த்தைகளை கவனத்தோடு கேட்டதினால், அவள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கைக் கொண்டவளாகக் கடைசி நாளில் அவளுடைய சகோதரன் உயிரோடு எழுப்பப்படுவான் என்று நம்பினாள். மேலும், இயேசுவே மேசியா என்றும், அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன் என்றும் விசுவாசித்தாள். இப்பொழுதும் இயேசுவுக்கும் உயிர்த்தெழுக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன என்று அவள் கற்றுக்கொண்டாள்.

மார்த்தாள் அவ்விடம்விட்டு மரியாளிடம் சென்று, இயேசு அவளை அழைத்ததாகக் கூறினாள். மரியாள் வீட்டைவிட்டு இயேசுவை சந்திக்கும்படி சென்று, அவருடைய பாதத்தில் விழுந்தாள். (யோவா. 12:32) "இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள்" (யோவா. 11:32) என்ற வார்த்தைகளை நாம் வாசிக்கையில் அவளிடமும் காணப்பட்ட ஏமாற்றத்தை உணரலாம்.

இருவருமே இயேசுவை தங்களுடைய ஆண்டவராக அறிந்திருந்தார்கள். இருவருமே அவரை விசுவாசித்து, அவரை நேசித்து, அவருக்குப்பணிவிடை செய்தார்கள். இயேசு, அவர்களுடைய சகோதரனையும் நேசித்தார் என்பதையும் விசுவாசித்தார்கள். ஆயினும், அவர்களுடைய சகோதரனுடைய மரணத்தை தடுப்பதற்கு இயேசு காலத்திற்கு முன் வராத காரணத்தை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

லாசருவின் மரணத்தினிமித்தம் மார்த்தாள் மற்றும் மரியாள் மனம் உடைந்திருந்தார்கள். அவர்களின் துக்கமும் அவர்களை சுற்றியிருந்த அவர்களுடைய நண்பர்களின் துக்கமும் இயேசுவின் மனதை ஆழமாகப் பாதித்தது. "அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித்துயரமடைந்தார்" (யோவா. 11:33). அவர் லாசருவின் கல்லறைக்குச் சென்றபோது, வெளிப்படையாக இயேசு கண்ணீர் விட்டார். அவர் லாசருவை மரித்தோரிலிருந்து எழுப்பப்போவதை அறிந்திருந்தபோதிலும், அவருடைய மென்மையான இருதயம் அசைக்கப்பட்டது. மற்றொருவருடைய துக்கங்களையும், வேதனைகளையும் அவருடைய உணர்வுகள் சகித்துக்கொள்ள முடியவில்லை. (எபி. 4:15; ஏசா. 53:3)

**லாசருவின் உயிர்த்தெழுப்புதல்**

அவர்கள் கல்லறையண்டை சேர்ந்தபோது, அங்கிருந்த கல்லைப் புரட்டும்படி இயேசு கூறினார். மார்த்தாள் அதை தடுத்தபோது, "நான் உனக்கு சொல்லவில்லையா" என்று இயேசு பதிலளித்தார். மேலும், "நீ விசுவாசித்தால் தேவனுடைய

மகிமையைக் காண்பாய். அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக் கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார். இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேத சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள்" (யோவா. 11:40-44) என்று இயேசு கூறினார்.

மனித வரலாற்றில் **இதுவரையில் ஒருவரும் கண்டிராதபடிக்கு** அவர்களின் நன்மைக்காக இயேசு ஒரு அற்புதத்தை நடப்பித்தார். அவர்களுடைய மிகுந்த துக்கத்தை எல்லையற்ற சந்தோஷமாக மாற்றினார். லாசரு மீண்டும் ஜீவனைப் பெற்றார். இதன் விளைவாக இயேசுவின் மேல் அவர்கள் கொண்டிருந்த அன்பு எல்லை மீறியது. அவர்களின் மகிழ்ச்சி நன்றி உணர்வுகள் மற்றும் இயேசுவுக்காக கொண்டிருந்த பாராட்டுகளை வெளிப்படுத்துவதற்கு வகைதேடியிருக்க வேண்டும். சில நாட்களுக்குப் பின் குஷ்டரோகியாகிய சீமோனின் வீட்டில் நடத்தப்பட்ட இராவிருந்தின் போது, இக்காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டதைக் காணலாம்.

"குஷ்டரோகியாகிய சீமோனோடு" மார்த்தாள், மரியாள் மற்றும் லாசரு கொண்டிருந்த தொடர்பு பற்றி நமக்கு எதுவும் சொல்லப்படவில்லை. இந்த சீமோன் இவர்களின் தந்தையாகவோ அல்லது மார்த்தாளின் கணவராகவோ இருக்கக்கூடும் என்று பாஸ்டர் ரஸல் கூறுகிறார் (R2703). முந்தைய விருந்து மார்த்தாளின் வீட்டில் நடத்தப்பட்டதினால், சீமோன் அவர்களின் தந்தையாக இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஆனால், அந்நேரத்தில் அவர் உயிரோடு இல்லை என்பதையும் கூறப்படுகிறது.

இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் போது, இந்த வீடு அவருக்கு மிக நெருக்கமான வீடாக இருந்ததென்றும், மரணத்திலிருந்து லாசருவை எழுப்பினதற்குப் பின் இதுவே அவருடைய முதல் சந்திப்பு என்றும் ராபர்ட் ஷெக்லிமியான் (Robert Seklemian) "விலையேறப்பெற்ற தைலம்" என்ற பிரசங்கத்தில் குறிப்பிடுகிறார்.

உயிர்த்தெழுந்த லாசருவை பற்றிய வெள்ளம் போன்ற சிந்தனைகள், மரியாள் உள்ளத்தில் உதித்திருக்க வேண்டும். அவர்கள் மேல் இயேசு பொழிந்திட்ட பெரிதான அன்புக்கு ஈடாக அவள் பெற்றிருந்த உணர்வை எவ்வாறு வெளிப்படுத்துவது? மிகச் சிறந்த பூமியின் இராஜா அல்லது சக்கரவர்த்தியை நடத்துவதுபோல, தன்னிடமிருந்த விலையேறப் பெற்ற தைலத்தினால் அவரை அபிஷேகித்தாள். இந்த தைலம் மிகவும் விலையுயர்ந்ததாக இருந்தது. "இது உச்சிதமான விலையேறப் பெற்ற தைலம்" என்று ரோதர்ஹாம் மொழிபெயர்ப்பு கூறுகிறது. 300 தினாரிக்கு இதை விற்றிருக்கலாம் என்று யூதாஸ் கூறினான். இது ஒரு வருஷத்தினுடைய கூலியாகும் (யோவா. 12:5). இந்நாளில் இதன் மதிப்பு 17,000 டாலர்களாக இருக்கக்கூடும்.

இந்த நறுமண தைலம் பரம்பரையாக வந்த குடும்பச் சொத்தாக இருந்திருக்க வேண்டும் என்று ராபர்ட் ஷெக்லிமியான் கருதுகிறார். அவர்கள் தங்களுடைய வீட்டில் மிகப்பெரிய பொக்கிஷமாக இதை வைத்திருக்க வேண்டும். இயேசுவை அபிஷேகிக்க வேண்டும் என்ற காரியம் மரியாளின் ஆலோசனையாக இருந்தபோதிலும், அதற்கான முழு பலனை இயேசு மரியாளுக்கு கொடுத்தார். இக்காரியத்தை முழு குடும்பமும் ஒப்புக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவர்களுடைய குடும்ப சிநேகிதராகிய இயேசுவுக்காக இந்த தைலத்தை செலவழிப்பதில் மூவரும் இணைந்து செயல்பட்டிருக்க வேண்டும். மார்த்தாள் உணவு பரிமாறும் வேலைகளை முழுமையாக செய்து கொண்டு, இந்த முக்கியமான பணியைச் செய்வதற்கு மரியாளை சுதந்தரமாக விட்டுவிட்டாள். லாசரு இந்த இராவிருந்தில் கலந்து கொண்டார். அவருடைய ஜீவன் மீட்கப்பட்டதை அவர் உணர்ந்திருந்தார். இப்படியாக, இவர்களில் ஒருவரும் இக்காரியத்தை தடை செய்யவில்லை.

பஸ்காவுக்காக எருசலேமுக்கு செல்லும் வழியில் இயேசு அவர்களை சந்திக்கும்படி விரும்பினார்கள். ஒருவேளை அவர்களோடு தங்கியிருந்து விருந்து உண்ணும்படி இவர்கள் இயேசுவுக்கு ஆள் அனுப்பியிருக்க வேண்டும். ஆகவே, இந்த விருந்து அவர்களால் முன்னதாகவே திட்டமிடப்பட்டிருந்தது. ஆகவே, தங்களுடைய ஆண்டவரும், எஜமானனுமாயிருப்பவர் மேல் அவர்கள் கொண்டிருந்த அன்பையும், நன்றியுணர்வுகளையும் மொத்தமாக வெளிப்படுத்தும்படியாக, மரியாள் திட்டமிட்டிருந்த காரியத்திற்கு மற்ற இருவரும் ஒப்புக்கொண்டிருந்திருக்க வேண்டும். அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டாலும், மரியாளே இந்த அனுபவத்தை முழுமையாகப் பெற்றாள். லாசரு மரித்தபோது, அந்த தைலம் அவருடைய சரீரத்தை அபிஷேகிக்கப் பயன்படுத்தப்படாமல், ஆண்டவரை அபிஷேகிப்பதற்காகப் பாதுகாக்கப்பட்ட காரியம் இங்கு குறிப்பிடத்தக்கது.

**லாசருவின் உயிர்த்தெழுப்புதல்**

"இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் இருக்கையில், ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமளதைலமுள்ள வெள்ளைக்கல்பரணியைக் கொண்டுவந்து, அவர் போஜனபந்தியிலிருக்கும்போது, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்" மத். 26:6-7 என்று மத்தேயு எழுதுகிறார். "மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது" யோவா. 12:3 என்று யோவான் கூறுகிறார். மரியாள், வெள்ளைக்கல்பரணியை உடைத்து, அதிலுள்ள தைலத்தை ஆண்டவரின் தலையில் ஊற்றி, அதற்கு பின் மீதியுள்ளதை அவருடைய பாதங்களில் ஊற்றி தன் தலைமயிரினால் துடைத்தாள். அந்த வீடு மட்டுமல்ல, மரியாளின் தலைமயிரும் அந்த வாசனையினால் நிரம்பியது.

மரியாள் ஆண்டவருக்காகக் கொண்டிருந்த உச்சக்கட்ட அன்பு, அவள் இயேசுவை அபிஷேகித்த விதத்தில் வெளிப்பட்டது. தன்னிடமிருந்த விலையுயர்ந்த தைலத்தை மிக தாழ்மையான முறையில் அவரை அபிஷேகித்தாள். அவருடைய தலையில் ஊற்றினபின், அவள் தன்னுடைய ஆண்டவரின் பாதங்களில் குனிந்து அதை அபிஷேகித்து, தன்னுடைய மகிமையான கூந்தலினால் அதை துடைத்தாள் (1 கொரி. 11:15). மிகச் சிலரில் ஒருவளாக மரியாள் ஆண்டவருக்கு முன் தன்னை தாழ்த்தினாள்.

"அன்பின் பக்தி எவ்வளவு அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது! பாதங்கள் மனிதனுடைய மிக எளிமையான ஒரு அங்கத்தை அடையாளப்படுத்தும். அதேநேரத்தில், தலை மயிர் விசேஷித்தவிதமாக ஸ்திரீகளுக்கு விலையேறப் பெற்ற பொக்கிஷமாகவும், மகிமையாகவும் இருக்கிறது. இங்கு, மரியாள் தன்னுடைய ஆண்டவரை, தன்னுடைய எல்லா மகிமைக்கும் மேலானவர் என்பதை அடையாளப்படுத்தினாள்" (R3534)

**யூதாஸ் பற்றின விமரிசனம்**

மரியாள் மற்றும் அவளுடைய குடும்பத்தினர் ஆச்சரியப்படும் வகையில் அடுத்து நடந்தது என்ன? அவளுடைய கிரியைகளை மெச்சிக் கொள்வதற்குப்பதிலாக, அது விரையம் என்று யூதாஸ் கோரினான். நேர்மையான சீற்றம் கொண்டவனைப்போல, அந்த தைலம் 300 தினாரிக்கு விற்கப்பட்டு, அந்த பணத்தை தரித்திரருக்குக் கொடுத்திருக்கலாமே என்று அவன் கூறினான் (யோவா. 12:4-6). இவனுடைய வார்த்தைகளை சீஷர்களும் ஆமோதித்தார்கள் (மத். 26:8-9; மாற். 14:4-5). ஆயினும், யூதாஸ் ஒரு வஞ்சகனாக இருந்தான் என்று யோவான் குறிப்பிடுகிறார். அவன் தரித்திரர்களுக்காகவும் கவலைப்படவில்லை, ஆண்டவருக்காகவும் கவலைப்படவில்லை. அவன் அந்த தைலத்தை விற்று தன்னுடைய சுய இலாபத்திற்காக தன்னுடைய பணப்பையில் போட்டுவிப்பதற்கு ஆசையாயிருந்தான்.

மரியாள் கொண்டிருந்த ஆழமான அன்பை புரிந்துகொள்ளாதவர்களாக சீஷர்களும் கூட யூதாசின் வார்த்தைகளை ஆமோதித்தனர். அவர்களின் குடும்ப நபர்களில் ஒருவரையும் இயேசு எழுப்பாததினால், மரியாள் செய்த காரியம் ஊதாரித்தனமாக அவர்களுக்குத் தோன்றியது. ஆனால், இத்தகையான வார்த்தைகள் மரியாளின்

இருதயத்தை நொறுக்கியிருக்க வேண்டும். தன்னுடைய அன்பையும், நன்றி உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்காக அவள் திட்டமிட்டிருந்த இக்காரியத்தைக் குறித்து இயேசுவுக்கு மிக நெருக்கமாயிருந்த சீஷர்களும் கூட இவ்வாறாகப் பேசினது அவளுக்கு வருத்தத்தை தந்திருக்க வேண்டும்.

**இயேசுவின் பதில்**

அவருடைய சீஷர்களைப் போலில்லாமல், மரியாளின் வெகுமதியை அதற்கும் மேலாக அவள் கொண்டிருந்த ஆழமான அன்பை, இயேசு தெளிவாக உணர்ந்திருந்தார். இயேசு சீஷர்களுக்கு அளித்த பதிலில், மரியாளின் இருதயத்திலுள்ள ஆழமான பக்தியையும், அன்பையும் அவர் அறிந்திருந்தார் என்பதை நாம் உணரலாம். "அவளை விட்டுவிடுங்கள்; ஏன் அவளைத் தொந்தரவு படுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள். இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்; நான் அடக்கம்பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்டாள். இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற். 14:6, 8-9).

மரியாள் இயேசுவுக்கு ஒரு தூதனைப்போல் இருந்தாள். பிதாவின் அளவற்ற இரக்கத்தைக் குறிப்பிடும்படியாக ஆண்டவரின் ஆவியை உற்சாகப்படுத்தும்படி, அவளுடைய கிரியை தேவனிடத்திலிருந்து வந்த ஒரு ஆசீர்வாதமாக இருந்தது. இயேசுவினிடத்தில் காட்டப்பட்ட அன்பின் கிரியைகளில் இவள் செய்திட்ட காரியம் மிக நேர்த்தியானது. சீஷர்கள் தரித்திரர்களுக்கு இரக்கம் காண்பிப்பதற்கு பல காலங்கள் இருந்தன. ஆனால், இயேசு அவர்களோடு சில நாட்கள் மட்டுமே இருந்தார். இக்காரியங்களை அறியாதபோதிலும் மரியாள் இயேசுவை அபிஷேகித்து, அவர் சரீரத்தை அடக்கம் செய்வதற்கு ஆயத்தம் செய்தாள். மரியாளின் இரக்க செயல், இயேசு தேடின அன்பையும், குணலட்சணங்களையும் வெளிப்படுத்தியது. ஆகவே, அவள் சரியான காரியத்தைச் செய்தாள் என்று கூறி அவளை மெச்சிக்கொண்டார்.

மரியாளை புகழும்படியாக இந்த சம்பவம் பதிவு செய்யும்படி ஆண்டவர் கோராமல், அவளை ஒரு நல்ல மாதிரியாக நாம் பின்பற்றும்படியாக அவளை முன் வைத்தார். அவளைப்போல, ஆண்டவரை அபிஷேகித்து நாமும் கூட அவருக்காகக் கொண்டிருக்கும் அன்பையும், நன்றி உணர்வுகளையும் வெளிப்படுத்த வேண்டும். இருதயத்தின் நோக்கமே இப்படிப்பட்ட கிரியையாக வெளிப்படுத்த வேண்டும் என்று நம் ஒவ்வொருவரிடமும் ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

இயேசு மரிப்பதற்கு முன் மரியாள் தான் கொண்டிருந்த ஆழமான அன்பை நேரிடையாக வெளிப்படுத்த முடிந்தது. ஆனால், நம்மை பொறுத்தவரையில்?

**இயேசுவின் தலையை அபிஷேகித்தல்**

ஆண்டவரின் தலையையும், அவருடைய பாதங்களையும் மரியாள் அபிஷேகித்தாள். இயேசுவுக்கும் (நம்முடைய தலை), நம்முடைய சகோதரர்களுக்கும் (அவருடைய பாதங்கள்) நம்முடைய அன்பை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்று இது அடையாளப்படுத்துகிறது. இதை நாம் எவ்வாறு செய்வது? இயேசுவின் பிரமாணங்களைக் கைகொள்ளுவதினால், அவர் மேல் வைத்திருக்கும் அன்பை நாம் வெளிப்படுத்தலாம். "என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன். ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" (யோவா. 14:21, 23).

அவருடைய வார்த்தைகளைக் கைக் கொண்டு, அவருடைய மாதிரியைப் பின்பற்றி மற்றும் அவருடைய குணலட்சணங்களினால் நம்முடைய இருதயங்ளை ஆறுதல் அளிப்பதன் மூலம் அவர் மேல் கொண்டுள்ள அன்பை நாம் வெளிப்படுத்தலாம்.

"என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது" (யோவா. 14:24) என்று எளிமையாக ஆண்டவர் கூறுகிறார். ஆண்டவருடைய வார்த்தைகளை ஜாக்கிரதையாகக் கடைபிடிக்க தொடர்ந்து முயற்சிக்காவிட்டால், அவருக்காக நாம் கொண்டிருக்கும் அன்பு குறைவானதாகக் காணப்படும்.

நாம் பின்பற்றும் படி இயேசு கொடுத்த கற்பனைகள் என்ன? அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது, மூன்று காரியங்களை இயேசு குறிப்பிட்டார். முதல் இரண்டு காரியங்களை மத். 22:37, 39-40) ஆகிய வசனங்களில் காணலாம். "**உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்க தரிசனங்களும் அடங்கியிருக்கிறது.**"

இயேசு தம்முடைய மூன்றாவது கற்பனையை, (யோவா. 13:34)-ல் கொடுத்துள்ளார். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்."

இம்மூன்று கற்பனைகளும் அன்பின் இராஜரீக பிரமாணம் என்று (யாக். 2:8) கூறுகிறது. மரியாள் இயேசுவின் தலையை அபிஷேகித்ததை அடையாளமாக சொல்லப்பட்டது போல, நம்முடைய அன்பையும் நேரிடையாக இயேசுவினிடத்தில் செலுத்துவதற்கு முதலாவது, பிதாவாகிய தேவனை நேசிக்க வேண்டும். அடுத்து, நம்மை நேசிப்பதுபோல, பிறரையும் நேசிக்க வேண்டும். மற்றும் இயேசு சகோதரர்களை நேசித்ததுபோல, நாமும் அவர்களுக்காக ஜீவனை தந்து அவர்களை நேசிக்க வேண்டும் (1 யோவா. 3:16). நம்முடைய அன்பு, இயேசுவினிடம் மட்டுமே செலுத்தப்படாமல் - விரிவான வகையில் நம்முடைய பரலோக தந்தை, நம்முடைய சகோதரர்கள், நம்முடைய அயலகத்தார்கள் மற்றும் நம்முடைய எதிராளிகளையும் நேசிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் (லூக். 6:27-28; 32-35).

**இயேசுவின் தலையை அபிஷேகித்தல்**

இயேசுவின் பாதங்களை அபிஷேகித்து, தன் தலைமயிரினால் அதை துடைத்த மரியாளின் கிரியையை நாம் இயேசுவுக்குள் கொண்டிருக்கும் ஆழமான அன்பை கிறிஸ்துவின் பாத அங்கங்களுக்கு தாழ்மையோடு ஊழியம் செய்ய வேண்டும் என்று காட்டினாள். இதை, அப்போஸ்தலனாகிய பவுல், கலா. 6:10-ல் உறுதிபடுத்துகிறார். "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம்." மேலும், "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அனுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" என்றும் கலா. 5:13-ல் பவுல் கூறுகிறார். ஆண்டவராம் இயேசுவுக்கு நேரடியாகப் பணி செய்வதற்கு ஒப்பாக நம்முடைய சகோதரர்களை நேசித்து, அவர்களுக்கு ஊழியம் செய்து, நம்மை நாம் பலி செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இதில், அடங்கக்கூடியவர்கள் யார்? யாரானாலும் சரி, ஆண்டவரின் சீஷர்கள் யாவரும் நம்முடைய ஊழியத்தைப் பெறக்கூடியவர்களாக இருக்க வேண்டும். நம்மோடு இசைந்திருக்கும் சகோதரர்களோடு மட்டுமல்ல, அனைவரையும் இதில் உள்ளடக்கும். மேலும், அனைவரால் மறக்கப்பட்டவர்களையும், பிரபலமில்லாதவர் களையும் பலரால் உதவி செய்வதற்கு கவனம் செலுத்தப்படாதவர்களையும் நாம் கவனிக்க வேண்டும். மற்றும், நமக்கு எந்த கைமாறு செய்யாதவர்களும், உதவிகளைச் செய்ய இயலாதவர்களுக்கும் நாம் ஊழியம் செய்ய வேண்டும். நாம் ஜாக்கிரதையோடு தொடர்ந்து கவனித்து உதவியை எதிர்பார்க்கக்கூடியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்கள் நம்மிடம் வந்து கேட்கும் வரைக்கும் நாம் காத்திருக்கக்கூடாது. மாறாக,

அவர்களை நாமே தேடி அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இதற்கு தபீத்தாள் அல்லது தொற்காள் என்று அழைக்கப்படும் சீஷி ஒரு சிறந்த மாதிரியாக இருந்தாள். "அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள்" (அப். 9:36). அக்காலத்தில் விசேஷமாக அவள் சகோதரர்கள் மத்தியிலிருந்த நலிந்த வகுப்பாருக்கு அதிகமாக உதவி செய்தாள். "அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரண மடைந்தாள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்துநின்றார்கள்" (அப். 9:37-41). தபீத்தாள் முன் வைத்துச் சென்ற மாதிரியை நாம் அனைவரும் பின்பற்றுவோமாக.

**நம்முடைய வெள்ளைக்கல் பரணி**

மரியாள் ஐசுவரியமுள்ளதும், விலையேறப் பெற்றதுமான தைலத்தை நம்முடைய ஆண்டவரின் மேல் ஊற்றினாள். நமக்கான வெள்ளைக்கல் பரணி என்பது என்ன? அதை நாம் எவ்வாறு உடைப்பது? மரியாளின் வெள்ளைக்கல் பரணி என்பது, நம்முடைய இருதயத்தையும், அவள் இயேசுவின் மேல் ஊற்றின தைலம், சகோதரர்களுக்காக நம்முடைய இருதயத்தில் கொண்டிருக்கும் அன்பையும், சிறந்த வாழ்த்துதலையும் அடையாளப்படுத்தும் என்று சகோ. ரஸல் கருதுகிறார்.

"நம்முடைய அருமை இரட்சகரோடு நேரடியாக தொடர்பு வைத்துக்கொள்வதற்கு நமக்கு இப்பொழுது வாய்ப்பில்லை. ஆகவே, ஆண்டவரின் சகோதரர்களுக்கு அன்பாகிய நறுமண தைலத்தை மிக விலையுயர்ந்த நம்முடைய சுயத்தை வெறுத்தலைக்கொண்டு, அபிஷேகிப்பதை இப்பொழுது நாம் பெற்றிருக்கும் சிறப்புரிமையாகும். நம்முடைய மூத்த சகோதரர்களுடைய பார்வையில் இது அதிக விலையேறப் பெற்றதாக இருக்கும் " (R2448).

இதை நாம் எவ்வாறு செய்வது? "சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் " (மத். 10:42) என்று இயேசு கூறுகிறார். தேவைப்படும் நேரத்தில் ஒரு கலசம் தண்ணீர் கொடுப்பது, விலையுயர்ந்த தைலத்தைக் கொடுப்பதற்கு ஒப்பாகும். இப்படியாக, நம்முடைய ஊழியம் எளிமையாகவும் இருக்கலாம். நாம் எவ்வளவு மதிப்புள்ள ஊழியங்களை செய்கிறோமோ, ஆண்டவரின் பார்வையில் அதிகமாக மதிப்பிடப்படும்.

நம்முடைய சகோதரர்களின் சோதனை களிலும் கடினமான அனுபங்களிலும் அவர்களின் சுமையை இலகுவாக்குவது ஒருவிதத்தில் அவர்களுக்கு ஊழியம் செய்வதாகும். மரியாளும் இக்காரியத்தைச் செய்தாள். இக்கட்டான சோதனைகளையும், உடல் ரீதியான சோதனை களையும், பலவீனங்களிலும், வேலைகளினிமித்தமாக பிரச்சனைகளை சந்திக்கக்கூடியவர்கள் உலகப் பிரகாரம் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சனைகள், குடும்பத்தில் இல்லாமல் தனிமையில் தள்ளாடும் நபர்கள் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையில் போராடுகிற நம்முடைய சகோதரர்கள் மேல் அன்பை பொழிந்து நாமும் மரியாள் செய்த கிரியைகளை நடப்பிக்கலாம்.

மார்த்தாள் மற்றும் மரியாள் ஆண்டவரை ஊக்குவித்ததுபோல, சந்திக்கக்கூடிய சோதனை களையும், அழுத்தங்களிலிருந்தும் இளைப்பாறுதல் அடைவதற்கு ஒரு ஸ்தலத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாம். அவர்களை ஆவிக்குரிய விதத்தில் உற்சாகப்படுத்துவதற்கு அவர்களுடைய வார்த்தை களைப் பொறுமையோடு கேட்டு அவர்களுடைய இருதயத்திலிருக்கும் பாரங்களையும், பயங்களையும் அகற்றுவதற்கு வாய்ப்பளிக்கலாம். அவர்களின் சுமையை நாமும் சுமந்து பகிர்ந்து கொள்ளலாம். தேவைப்படும் நேரங்களில் நம்முடைய நேரம், பொருள், உடல் ரீதியான உதவிகள், போக்குவரத்து உதவிகள் மற்றும் எந்தவிதத்தில் உதவிகள் வேண்டுமோ அவைகளை நாம் செய்யலாம்.

தியத்தீரா பட்டணத்து இரத்தாம்பர வியாபாரியாகிய லீதியாள் இதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டு. பவுல் பேசின வார்த்தைகளைக்

கேட்கும்படி ஆண்டவர் அவள் இருதயத்தை திறந்தபோது, அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். "அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டில் வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்" (அப்.16:14-15). நாமும் கூட லீதியாளின் மாதிரியைப் பின்பற்றி ஆண்டவரின் பணியில் ஈடுபடுபவர்களுக்கு உதவியாளர்களாக இருப்போம்.

**நம்முடைய எதிர்நோக்கு**

ஆண்டவர் நம் மேல் பாராட்டின உச்சக்கட்டமான அன்பிற்காக, மரியாள் போல், நம்முடைய அன்பையும், நன்றி உணர்வுகளையும் மற்றவர்களுக்கு உதவி செய்வதின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். அர்ப்பணிக்கப்பட்ட யாவரும் ஆதாமின் தீர்ப்பிலிருந்து உயிர்க்கப்பட்டு புதிதான ஜீவனுக்குள் நடத்தப்படுகிறார்கள் - மரித்தோரிலிருந்து லாசரு உயிர்த்தெழுந்ததுபோல. "இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (1 பேது. 1:4). லாசரு மற்றும் அவருடைய சகோதரிகளை போல, நாமும் ஒரு விடுதலைப் பெற்றதற்காக, அவருக்கு நன்றி உள்ளவர்களாய் இருக்க வேண்டும். நம்முடைய மீட்புக்காக அவர் பாராட்டின மிகுதியான அன்பானது, நம்முடைய ஆண்டவரின் பணியில் எதற்கும் தயங்காமல் நம்மை வழிநடத்த வேண்டும்.

மரியாள் போல நம்முடைய பணி மிகுந்த தாழ்மையோடு ஏறெடுக்கப்பட வேண்டும். இயேசு சீஷர்களுடைய கால்களைக் கழுவுவதற்கு முழங்காற்படியிட்டதுபோல, மரியாளும் ஆண்டவருக்கு முன் முழங்காற்படியிட்டாள். நாமும் கூட நம்முடைய சகோதரர்களுக்கு ஊழியம் செய்யும்பொழுது முழங்காற்படியிட வேண்டும். நாம் மேன்மையைப் பெறுவதற்காக ஊழியம் செய்யாமல், மற்றவர்களின் பாரத்தைக் குறைத்து அவர்களுடைய இருதயத்திற்கு புத்துயிர் ஊட்டி, அவர்களுடைய விசுவாசத்தை பலப்படுத்தி, வைராக்கியத்தை ஊக்குவிப்பதற்கே ஊழியம் செய்ய வேண்டும். இப்படியாக, மனத்தாழ்மையோடு பணி செய்வதற்கு ஆக்கில்லாள் மற்றும் பிரிஸ்கில்லாள் சிறந்த மாதிரிகளாக முன் வைக்கப்படுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு தங்களுடைய கழுத்தைக் கொடுக்கவும் ஆயத்தமாக இருந்தார்கள். (ரோ. 16:3-4). நம்முடைய தாழ்மையில் ஒருவருக்கொருவர் நம்முடைய ஜீவனை பணையம் வைத்து உதவி செய்யக்கடவோம்.

**குறித்த காலம் தவறாமல்**

மரியாள் ஆண்டவரை அடக்கம் செய்யும்படியாக, அவரை அபிஷேகித்தாள் என்று ஆண்டவர் குறிப்பிட்டார். (யோவா. 12:7). விலையேறப்பெற்ற தைலத்தை ஆண்டவரின் தலையிலும், பாதங்களிலும் ஊற்றும்போது, அவளுடைய மனதில் இப்படிப்பட்ட சிந்தனைகள் எழும்பியிருக்க வாய்ப்பில்லை. ஆயினும், பஸ்கா முடிந்தபின் ஆண்டவர் அவளுடைய வீட்டிற்கு வரும்போது அவரை அபிஷேகிக்கலாம் என்று அவள் 6 நாட்கள் காத்திருந்தால், நம்முடைய ஆண்டவரை ஊக்குவித்து, புத்துணர்வு அளிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை அவள் இழந்திருப்பாள். குறித்த காலம் தவறாமல், மரியாளின் அன்பு அவளை காத்திருப்பதற்கு அனுமதிக்கவில்லை. கிடைத்த வாய்ப்பை சாதகமாக்கிக்கொண்டு, அவள் திட்டமிட்டதை நிறைவேற்றினாள். இதற்கு எதிரிடையாக, ஆண்டவரின் சரீரத்திற்கு கந்தவர்க்கங்களை இடவேண்டும் என்று வந்த ஸ்தீரிகள் மிகவும் தாமதமாக வந்தனர். (மாற். 16:1-2)

மரியாளை போல நாமும் நம்முடைய இருதயத்தின் அன்பை ஏற்ற நேரத்தில் சகோதரர்கள் மேல் திரைக்கு இப்பக்கத்தில் இருக்கும்போதே பொழிய வேண்டும். படிப்படியாக நம்முடைய ஒவ்வொரு சகோதரர்களும் தங்களுடைய ஓட்டத்தை முடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பின் அவரே அபிஷேகிப்பதற்குரிய வாய்ப்பை நாம் நித்தியத்திற்கும் இழந்துவிடுவோம். அவர்களுக்கு இப்பொழுதே - இடுக்கமான வழியில் செல்லும்பொழுதே நம்முடைய உதவிகள் தேவைப்படுகிறது. ஆகவே, நம்முடைய வெள்ளைக்கல் பரணியை உடைத்து, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அதிலுள்ள அன்பின் நறுமணம் வீசும் தைலத்தை ஊற்ற வேண்டும்.

ரோம சபையிலுள்ள சகோதரர்கள் ஏற்ற நேரத்தில் செய்யப்படும் உதவியை செயல்படுத்திக் காட்டினார்கள். பவுல் வருவதை அவர்கள் கேள்விப்பட்டபோது, உடனடியாக அவர்கள் ரோமாபுரியிலிருந்து அப்பியுபுரம் வரைக்கும் சந்திக்க வந்தார்கள். "அங்கே சகோதரரைக் கண்டோம்; அவர்களைப் பவுல் கண்டு, தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான்" (அப். 28:14-15). ரோம சகோதரர்கள் கிட்டத்தட்ட 43 மைல்கள் அல்லது ஒருநாள் பயணித்து பவுலை சந்தித்து வரவேற்றார்கள். இதினிமித்தம், பவுல் அதிகமாக உற்சாகப்படுத்தப்பட்டார். இந்த சகோதரர்களின் மாதிரியையும் நாம் பின்பற்றுவதற்கு முயற்சிப்போம்.

**முதலில் எடுக்கப்படும் முயற்சி**

மரியாளால் நடத்தப்பட்ட தைரியமான கிரியை, ஆண்டவரின் அங்கீகாரத்தைப் பெற்றது. அவளுடைய இருதயம் அவளை தாமதிக்கவிடவில்லை. கிடைத்த வாய்ப்பை விரைவாக கைப்பற்றினாள். நாம் மரியாளின் இடத்திலிருந்தால், இப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதற்கு முதலில் முன் வந்திருப்போமா? நம்முடைய ஆண்டவர் மேல் நாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கு இந்நாளிலும்கூட இப்படிப்பட்ட காரியத்தை செய்வதற்கு முன்வருவோமா?

நம்முடைய இருதயங்களாகிய வெள்ளைக்கல்பரணியை உடைத்து, அதிலுள்ள விலையேறப்பெற்ற தைலத்தை ஊற்றுவதற்கு நம்மை வழிநடத்தும் வைராக்கியம் எது? மரியாளைப் பொறுத்தவரையில், அவளுடைய சகோதரனாகிய லாசரு உயிர்ப்பெற்றதே காரணமாக இருக்க வேண்டும் என்று நாம் சிந்திக்கிறோம். அவள் முன்னதாகவே இயேசுவை அதிகமாக நேசித்தாள். அதற்குப் பின், அவர் லாசருவை உயிரோடு எழுப்பினபோது, ஆண்டவருக்காக அவள் கொண்டிருந்த பக்தியும், அன்பும் வேகமாக தூண்டப்பட்டு கொழுந்துவிட்டு எரிந்தது.

மரியாளின் மாதிரியைப் பின்பற்றுவதற்கு நம்மை தூண்டக்கூடிய காரியங்கள் என்ன?

- அந்தகார இருளிலிருந்து அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்த இயேசுவுக்கு, நம்முடைய நன்றியறிதலான உணர்வை ஏறெடுக்க வேண்டுமல்லவா?

- ஆதாமின் மரண தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தேவனுடைய புத்திரர்களாக மகிமையான சுயாதீனத்தைப் பெற்றிருக்கிறோமல்லவா?

- நம்முடைய வாழ்க்கையை தேவன் மேற்கொண்டிருப்பதினால், மிகுந்த ஆசீர்வாதங்களையும் நம்முடைய எதிராளிகளிடமிருந்து விடுதலையும் பெற்றிருக்கிறோமல்லவா?

- இந்த இடுக்கமான பாதையில் நடப்பதற்கு இயேசுவின் பலியின் நன்மைகளினால் நம்முடைய பாவங்கள் தேவனுடைய மிகுந்த அன்பினாலும், இரக்கத்தினாலும் மன்னிக்கப்பட்டதல்லவா?

மரியாளைப் போல - நாமும்கூட நமக்குள்ளிருக்கும் அன்பை கொழுந்துவிட்டு எரியச்செய்வதற்கு தேவையான காரணங்களைக் கண்டுபிடித்து, நாம் செல்லுமிடமெல்லாம் நமக்குள்ளிருக்கும் நறுமண தைலத்தை ஊற்றுவதற்கு ஆண்டவர்தாமே உதவி செய்வாராக.

# கிறிஸ்துவுக்குள் நற்பலன்கள்



"பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக். 12:32).

Tom Ruggirello

நாம் அனுசரிக்கப் பெற்றிருக்கும் சிலவற்றில் இயேசுவின் மரணத்தை நினைவுகூறுதல் ஒன்றாகும். இதை கீழ்ப்படிவதற்காகவே நாம் அனுசரியாமல், நம்முடைய ஆண்டவரைப் போல கனம் பொருந்திய ஒருவரின் மரணத்தை நினைவுகூறுதல் நம்முடைய சிறப்புரிமையாய் இருக்கிறது. நமக்காக இவ்வளவு காரியங்களைச் செய்து, தேவனிடத்தில் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கைக்குரிய சிறந்த மாதிரியை முன் வைத்த அவருக்கு இந்த மரியாதையைச் செலுத்துகிறோம்.

அவர் செய்த சகலவற்றிலும், அவர் பேசின சகல வார்த்தைகளிலும், அவர் தம்மைக்குறித்து எதுவும் கூறவில்லை. பிதாவை மகிமைப்படுத்துவதே அவருடைய நோக்கமாய் இருந்தது. அவருடைய மாம்சத்தின் ஒவ்வொரு அணுக்களும் இதை செய்ய விரும்பிற்று. எப்படிப்பட்ட மாதிரியை நமக்குப் பின் வைத்துச் சென்றார்! விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலைக்குறித்து சகல சிருஷ்டிகளும் கற்றுக்கொள்ள துவங்கும்பொழுது, எப்படிப்பட்ட மாதிரியாக அவர் இருப்பார்!

"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி. 2:6-8) என்று பவுல் இவ்வாறாகக் கூறுகிறார்.

நாம் இயேசுவின் வாழ்க்கையை அதிகமதிகமாகக் கற்றுக்கொள்ளும் போது, நாம் எவ்வளவு நன்மைகளைப் பெறவிருக்கிறோம் என்பதை அதிகமாக அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட நன்மைகளை நாம் வேறு எந்தவழியிலும் பெற இயலாது.

**இப்போது நாம் எட்டி பிடிக்கும் நிலையில் பிதாவாகிய தேவன்**

தேவனிடத்தில் அர்ப்பணித்தவர்கள் இயேசுவினிமித்தமாகவே இப்பொழுது தேவனை தாங்கள் எட்டி பிடிக்கும் அளவுக்கு நன்மைகளைப் பெறுகிறார்கள். தேவனைப்பற்றி அதிகமான காரியங்கள் நமக்கு மறைவாய் இருப்பதினால் இவைகளைப் புரிந்துகொள்வது கடினமாக உள்ளது. சகல சிருஷ்டிப்புகளுக்கு பின்னணியாக அவருடைய நுண்ணறிவு மறைந்துள்ளது. சகல நட்சத்திரங்கள் மற்றும் நட்சத்திர மண்டலங்களின் வல்லமையும் அவருடைய உள்ளங்கையில் அடக்கப்பட்டுள்ளது. இரவும் பகலும் அவரை சேவிக்கும்படி கோடானகோடி தூதர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சர்வவல்லமையுள்ள தேவனை மிக எளிதாக அர்ப்பணிக்கப்பட்டவர்கள் தொடர்பு கொள்ளலாம். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோவா. 1:12). தேவனற்ற ஜீவன் அர்த்தமற்றதாகும். தீமையின் அனுமதித்தல் என்ற தலைப்பின் கீழ் இது ஒரு முக்கிய பாடமாகும். தேவனற்ற வாழ்க்கை சூன்யமாக உள்ளது.

அவர் கடைபிடிக்கும் கோட்பாடுகள் அவருடைய பூரண குணலட்சணங்கள், அவருடைய அருமையான சாயல், அவரிடமிருந்து ஊற்றப்படும் பரிபூரணமான அன்பு இயேசுவை நமக்கு தந்ததினால் இப்பொழுது நம் மேல் பொழியப்படுகிறது. தேவனுடைய புத்திரர்களாக இருப்பது எளிதான காரியமல்ல. ஆண்டவராம் இயேசு, தான் பரலோகத்திற்குச் சென்றபின் தேற்றக்கூடிய மற்றும் போதிக்கக்கூடிய தேவனுடைய ஆவியை அனுப்புவதாக வாக்களித்தார். இது நமக்குள் தேவன் நேரடியாக செயல்படுவதற்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமாகும். இப்பொழுது, நம்மோடு கூட

இருக்கும் அவருடைய பிரசன்னம் நம்மை உயர்ந்த நிலைக்குத் தகுதி பெற வாய்ப்பளிக்கிறது. இதற்கேற்றவாறு நம்மை சீர்ப்படுத்துவதற்காக அவர் கொண்டிருக்கும் நீடியபொறுமையினிமித்தம் அவர் நம்மை நடத்தும் விதத்திலிருந்து காணலாம். தம்முடைய பிள்ளைகளை அன்பாய் நேசிக்கும் ஒரு கனிவான தந்தையாகக் காணப்படுகிறதால் இப்படிப்பட்ட மேலான உறவை ஆண்டவராம் இயேசு தாமே வாய்க்கும்படி செய்தார். ஆகவே, நாம் அவரை போற்றுவோம்!

**நம்மோடு நடக்கும் ஆண்டவராம் இயேசு**

நாம் தேவனிடத்தில் தொடர்பு கொள்வதற்கு மட்டும் வழிவகுக்காமல், நாம் இயேசுவோடும் கூட தொடர்பு கொள்வதற்கு வழிவகுத்திருக்கிறார். நமக்கு வழி காட்டும் நம்முடைய தலையாகவும் இருக்கிறார். அவருடைய வாழ்க்கையை சிறந்த மாதிரியாக நமக்கு முன் வைத்து நாம் அதை பின்பற்றும்படி வழி நடத்துகிறார். நம்முடைய சகல உணர்வுகளையும் புரிந்துகொண்டு, நம் மேல் இரக்கம் பாராட்டக்கூடிய பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார். தேவனைப் பற்றியும், அவருடைய திட்டத்தைப் பற்றியும் ஆழமான புதிய கண்ணோட்டத்தை நம்முடைய சிந்தைகள் பெரும்படியாக சத்தியத்தின் வெளிச்சத்தைக் கொண்டுவந்த மாபெரும் அப்போஸ்தலரும், போதகருமாய் இருக்கிறார்.

எதிரிகளிடமிருந்து நம்மை பாதுகாத்து, நம்முடைய காயங்களை குணமாக்கி நித்தமும் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் நம்முடைய மேய்ப்பராய் இருக்கிறார். நம்மை நேசித்து, அவரோடு கூட எப்பொழுதும் இருக்க வேண்டும் என்று விரும்பும் மணவாளனாய் இருக்கிறார். இடுக்கமான வழியில் நாம் வெற்றி பெறும்படி, நம்மை ஊக்குவிப்பதற்கு அவருடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்படிக்கு நம்முடைய சகோதரனாக இருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய சிநேகிதனாகவும் இருக்கிறார். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலு மில்லை" (யோவா. 15:13). இயேசு நம் பட்சத்தில் இருந்தால் திரளான நன்மைகளைப் பெற்றிருப்போம்.

**நம்பிக்கை**

"இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களா யிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி. 15:19-22).

அப்போஸ்தலரின் வாதம் வல்லமையுள்ளது. இயேசு உயிர்த்தெழுப்பப்பட்ட போது, அவர் மரித்தோரின் முதற்பலனானார். மற்றவர்கள் அவரைப் பின்பற்றும்படி அவர் ஒரு உத்தரவாதத்தைக் கொடுத்தார். இயேசு உயிர்த்தெழுந்ததுபோலவே, சபையும் உயிர்த்தெழும் என்ற உண்மைக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவாதமாய் இருக்கிறது. இயேசு உயிர்த்தெழுந்தார் என்று நாம் விசுவாசித்தால், அவரை மரணம் வரைக்கும் பின்பற்றினவர்கள் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவார்கள் என்று நாம் நிச்சயமாக விசுவாசிக்கலாம்.

நமக்குண்டான நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையானது நாம் இப்பொழுது கொண்டிருக்கும் நோக்கங்களையும் இலக்குகளையும் முற்றிலுமாக மாற்றச் செய்யும். இந்த வாழ்க்கையில் கஷ்டங்களையும், துன்பங்களையும் சகிப்பதற்கான காரணங்களை இது தருகிறது. இவைகளை சகிப்பதோடு மட்டுமல்ல, இவைகளின் நோக்கத்தையும், பொருளையும் அறிந்திருக்கும் நாம் அவைகளில் மகிழ்ச்சியோடும் இருக்க வேண்டும். தம்முடைய பிள்ளைகளின் நன்மைக்காகவே சிந்திக்கக்கூடிய அன்பான பிதாவை, தேவனாக கொண்டிருக்கிறோம். பிள்ளைகளின் நன்மைக்காகவே அவர் சகல காரியங்களையும் திட்டமிடுகிறார். தேவனுடைய தெய்வீக திட்டம் ஆசீர்வாதங்களின் வரைப்படமாக உள்ளது.

**வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சந்ததி**

இந்த பூமியிலுள்ள முழு குடும்பமும் ஆசீர்வதிக்கப்படும் என்ற வாக்குத்தத்தமான சந்ததியின் ஒரு பகுதியாக இயேசு இருப்பதினால்,

சபையும் நன்மையைப் பெறக்கூடியதாய் இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் உலகத்தை நாம் காணும்போது, அதற்காகப் பரிதாபப்படுகிறோம். கோடிக்கணக்கான ஜனங்கள் உணவின்றி வாடும்போது துக்கமடைகிறோம். வீடில்லாத எளியோரை காணும்போது, வேதனைப்படுகிறோம். பாவமானது, மனித குடும்பத்தை மிகக் கேவலமான ஊனம் நிலைக்குத் தள்ளியது.

மரிக்கும் செயல் கடுஞ் சோதனைக்குரிய வியாதியாக உள்ளது. ஆனால், அர்ப்பணிக்கப்பட்டவர்களிடத்தில் தேவன் கொடுத்த வாக்குத்தத்தம், இப்படிப்பட்ட பாரங்களை அகற்றுவதற்கு வழிநடத்தும். எவ்வளவு அற்புதமான முன்னேற்பாடு! பாவமானது, மனித குடும்பத்தை சீரழித்தப்போதிலும், அந்த சாபத்தை நீக்கி பரிசுத்தம் மற்றும் பூரண நிலையைப் பெறுவதற்கு நம்முடைய உடன்படிக்கையே ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

இயேசு நம்முடைய ஆசாரியராக இருப்பதினால், இதைக்காட்டிலும் மேலான நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம். ஆசாரியர்களாயிருந்த மற்ற மனுஷர் எந்தவித உத்தரவாதமின்றி செயல்பட்டனர். ஆனால் இயேசு, "அன்றியும், அவர்கள் ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்படுகிறார்கள்; இவரோ: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம்மாறாமலும் இருப்பார் என்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார். ஆனதால், இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டது எவ்வளவு விசேஷித்த காரியமோ, அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்" (எபி. 7:20-22) என்று நம்முடைய ஆண்டவர் வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தார். தேவனுடைய சகல வாக்குத்தத்தங்களும் உண்மையில் நிறைவேறும் என்பதற்கான ஒரு உறுதியாக இது காணப்படுகிறது. மேலான உடன்படிக்கையின் ஜீவனுள்ள உத்தரவாதமாக இயேசு இருக்கிறார். இயேசுவின் உயிர்த்தெழுதலின் வழியாக வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு இதைக்காட்டிலும் மேலான ஆதாரம் தேவையில்லை.

"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது" (வெளி. 21:4). இந்த வாக்குத்தத்தம் இராஜ்யத்தின் வேலைகளின் ஒரு சுருக்கமாய் உள்ளது. இயேசு மற்றும் சபை செய்ய வேண்டிய வேலைகளின் சாராம்சத்தை இது சுருக்கமாகக் காட்டுகிறது. இக்காரியங்கள் துவங்குவதற்கு விசுவாசத்தோடும், பொறுமையோடும் காத்திருக்க வேண்டும். இந்நாளில் கிறிஸ்தவர்களின் எந்தவிதமான செயல்பாடுகளும் உலகத்தின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணமுடியாது. ஆனால், இவைகள் நித்தியமாக நீடித்தும் இருக்காது. பசி, வறுமை மற்றும் சமுதாயத்தின் சகலவிதமான நலிவுகள் கிறிஸ்துவின் ஆட்சியின் கீழ் நீக்கப்படும். இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கக்கூடிய நாம் ஒவ்வொருவரும் மனுக்குலத்தை சீர்பொருந்துவதற்கு ஒரு பகுதியாகச் செயல்படுவோம். இப்படிப்பட்ட விருப்பம் நம்முடைய இருதயங்களில் கொழுந்துவிட்டு எரிய வேண்டும்.

**நம்முடைய சகோதரத்துவம்**

கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கும் இறுதியான நன்மை அவரால் ஸ்தாபிக்கப்பட்ட சகோதர ஐக்கியமே. புது சிருஷ்டியின் வழி மிகக் கடினமானது என்பதை இயேசு அறிந்திருந்தார். அவர் பூமியில் இருக்கும்போது, அவருடைய சபையாக இணைக்கப்பட்டிருக்கும் சகோதரர்களைக்குறித்தே அவருடைய இறுதி சிந்தனைகள் காணப்பட்டது. சரீரத்தின் ஐக்கியத்திற்காக அவர் உண்மையோடு வேண்டினார். "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோவா. 17:21-22).

அவருடைய சீஷர்களின் ஐக்கியத்தைக் குறித்தே இயேசு முக்கியமாகக் கவலைப்பட்டார். பிதாவோடு அவர் கொண்டிருந்த ஐக்கியத்தின் ஆவியே, இவர்களும் பெற்றிருக்க வேண்டும் என்றே விரும்பினார். இதுவே உண்மையானது. விசேஷமாக, ஐக்கியத்தின் ஆவியை நாம் பெறவிரும்பினால், நிச்சயமாக நாம் ஆண்டவரின் நினைவுகூருதலின் அடையாளங்களில் பங்கேற்கும்போது அவரை கனப்படுத்தக்கூடியவர்களாக இருப்போம்.

ஒரே சிந்தையுடைய சகோதரர்களோடு கூட சகோதர ஐக்கியத்தை ஒப்பிட்டு, அதை குறைவாக எப்பொழுதும் மதிப்பிடக்கூடாது. நாம் ஒருவரையொருவர் ஆண்டவருடைய கண்களின் வழியாகக் கண்டு, அவருடைய இரத்தத்தின் வழியாக இணைக்கப்பட்டால், இயேசு தேவனிடத்தில் விண்ணப்பித்த ஐக்கியத்தை நாமும் பெறலாம். இந்த நினைவுகூறுதலின் காலத்தில் நாம் ஒருவரையொருவர் ஆண்டவரின் கண்களின் வழியாகக் காண நம்முடைய முயற்சிகளை அதிகரித்துக்கொள்ளக்கூடியவர்களாய் இருக்கிறோம். அப்பொழுது, நாம் மற்றவர்களை அதிகமதிகமாக மன்னித்து, அவர்களை ஆசீர்வதிப்பதற்கு பலவழிகளைத் தேடுவோம். வரக்கூடிய வருடத்தில் இயேசுவை இன்னும் துல்லியமாகப் பின்பற்றுவதற்கு இக்காரியம் நம்மை ஆயத்தப்படுத்தும்.

**நித்தமும் நம்முடைய நினைவுகூறுதல்**

இயேசு, நினைவுகூறுதலின் அடையாளங்களை நமக்கு கொடுத்து, "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். இதை ஒரு விசேஷித்த அனுசரிப்பாக வருடத்திற்கு ஒருமுறை மகிழ்ச்சியோடு நினைவுகூறுகிறோம். ஆயினும், நம்முடைய கிறிஸ்தவ நடையில் நித்தமும் இயேசுவை நினைவுகூறுவதற்கு பலவழிகளைத் தேடலாம். நம்முடைய அன்றாட அனுபவங்களில் தேவனை தேடும்பொழுது நாம் இயேசுவை நினைவுகூறுகிறோம். அதிகமாக சத்தியத்தை தேடும்பொழுது, நாம் இயேசுவை கனப்படுத்துகிறோம். நாம் சகோதரர்களை ஊக்குவிக்கும்போது, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த வேண்டும் என்று அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறோம். நம்முடைய எதிராளிகளை நேசிக்கும் பொழுது, இயேசுவின் மாதிரிகளைப் பின்பற்றுவோம். நம்முடைய ஆண்டவருக்காக நம்மை தாழ்மையோடு அர்ப்பணித்து பலி செலுத்தும்போது, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோம். இப்படியாக, நித்தமும் எடுக்கப்படும் முயற்சிகள், அவரை நினைவுகூறுவதற்கு நமக்கு உதவியாயிருக்கிறது.

"சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது. அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள். அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள்யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள்யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்" (வெளி. 5:11-13).



# யூதா கோத்திரத்தின் பால சிங்கம்

"அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்" (வெளி. 5:5).

Len Griehs

இந்த பூமியை ஆட்சிசெய்யும்படி ஆண்டவராம் இயேசு, தம்முடைய இராஜரீகமான பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் காலத்தைக் குறித்த வல்லமைமிக்க விவரங்களை வெளிப்படுத்தல் புத்தகம் கொண்டுள்ளது. ஐந்தாம் அதிகாரத்தின் முதல் பத்து வசனங்கள் இயேசுவை, அடிக்கப்பட்ட ஆடாகவும், ஜெயம் பெற்ற ஒரு சிங்கமாகவும் விவரிக்கிறது. "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவா. 1:29) என்று யோவான்ஸ்நானன் இயேசுவை அறிமுகப்படுத்தினார்.

அவர் கொடுத்த ஈடுபலிக்குப் பாத்திரமாக இயேசுவில் காணப்பட்ட பரிபூரணம் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை மற்றும் அவருடைய ஊழியம் ஆதாம் மற்றும் முழுமனுக்குலத்தை இரட்சிப்பதற்கு நிரூபனமாயிருந்தது. சிலுவையின் மேல் அவருடைய சரீரம் மரித்ததினிமித்தமாக ஈடுபலி செலுத்தப் பட்டாலும் யோர்தானிலிருந்து கல்வாரிக்கு செல்லும் வரை அவர் கடந்த மூன்றரை வருடங்களாக பலியின் மரணம் உயிர்த்தெழுதலில் இயேசு புதிதான ஜீவனை சுதந்தரிப்பதற்குப் பாத்திரமாக நிரூபிக்கப்பட்டது. ஆண்டவருக்குரிய ஜீவியாக அவர் பெற்ற உயிர்த்தெழுதல் பிதாவாகிய யேகோவா தேவனால் அதிகாரப்பூர்வமாய் அங்கீகரிக்கப்பட்டது. இதினிமித்தம், அனைவரின் சார்பாக அவருடைய பலியின் நன்மையை தேவன் ஏற்றுக்கொண்டார். முதலில், இந்த சுவிசேஷ யுகத்தில் அவரைப் பின்பற்றக்கூடியவர்களுக்கும் அதற்குப் பின் ஆண்டவர் ஆயிரம் வருஷம் ஆட்சியில் உயிர்த்தெழுப்பப்படும் அனைவருக்கும் இந்த நன்மைகள் கையளிக்கப்படும். "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி. 2:8-11). இந்த பகுதியில் பூமியின் கீழ் இருப்பவர்களும் இயேசுவின் நாமத்தை தொழுது கொள்ளும்படியாக மீண்டும் ஜீவனுக்குள் எழுப்பப்படுவார்கள். இப்படியாக, உயிர்த் தெழுதலினால் முழுமனுக்குலமும் உண்மையான யேகோவா தேவனை அறியும் அறிவையும், குமாரனுக்குள் பெறக்கூடிய மகிழ்ச்சியையும் மீண்டும் நித்தியஜீவனைப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பும் கொடுக்கப்படும்.

### புத்தகம் திறக்கப்படுதல்

வெளிப்படுத்தல் ஐந்தாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட புத்தகம் ஒரு சுருள் வடிவத்தில் இருந்தது. அது மேற் புறமும் எழுதப்பட்டிருந்தது. அதில் ஆறு முத்திரைகளை ஒன்றுக்குப்பின் ஒன்றாக உடைக்கும் போது அதின் உட்புறத்திலும் எழுதப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இது தேவனுடைய திட்டம்! "இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்... அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார்" (வெளி. 5:6-7; எசே. 2:8, 3:3; சக. 5:1-4).

இயேசு - சுவிசேஷ யுகத்தின் ஆட்டுக்குட்டி - தெய்வீகத் திட்டத்தோடு சுவிசேஷத்தை வெளிப்படுத்தினவர் அவரே. ஆயினும், அவருடைய உயிர்த்தெழுதல்வரைக்கும் திவ்விய சுபாவத்தைப் பெற்ற ஆவிக்குரிய ஜீவியாக அவர் மாறி, பரிசுத்த ஆவியை அவருடைய சீஷர்களுக்குக் கொடுத்தப்பின்

இந்த திட்டத்தை அவர்கள் புரிந்துகொள்ளத் துவங்கினார்கள். "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத். 28:18). பிதாவாகிய தேவன் இயேசுவுக்கு வெளிப்படுத்தினதுபோல, இயேசு தம்முடைய சீஷர்களுக்கு சகலத்தையும் வெளிப்படுத்துவார் என்ற ஆண்டவரின் வார்த்தைகளினால் உறுதி பெறுகிறோம். "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (1 கொரி. 2:10). தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், அபிஷேகிக்கப்பட்டவர்களும் இயேசு தம்முடைய ஜீவனை ஈடுபலியாகக் கொடுத்ததினிமித்தம், தேவன் அவர்களை அங்கீகரித்தார். மரணபரியந்தம் விசுவாசத்தைக் காத்துக்கொண்டால், இயேசுவின் ஒவ்வொரு அங்கத்தினரும் அவரோடு கூட இணைந்து, உயிர்த்தெழுப்பப்படும் ஆயிரக்கணக் கானவர்களுக்கு ஆசீர்வாதங்களை அளிப்பார்கள். "தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்" (வெளி. 5:9-10). அப்பொழுது இயேசு யூதா கோத்திரத்தின் பால சிங்கத்தைப் போல அவருடைய வேலைகளைத் துவங்குவார்.

**யூதா, பால சிங்கம்**

"யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே; உன் கரம் உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும்; உன் தகப்பனுடைய புத்திரர் உன்முன் பணிவார்கள். யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்து கொண்டு ஏறிப்போனாய்; என் மகனே, சிங்கம்போலும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப் படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார்? சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்" (ஆதி. 49:8-10).

யாக்கோபு கொடுத்த இந்த ஆசீர்வாதங்களில் அவருடைய குமாரனாகிய யூதா மற்றும் அவருடைய சந்ததிக்கு ஒரு விசேஷித்த நிலையைக் கொடுத்தார். இயேசு மரணத்தின் மேல் வெற்றியடையும் ஆசீர்வாதத்தை இது உள்ளடக்கி இருந்தது. யாக்கோபின் மூத்த குமானாகிய ரூபன் தேவனுக்கு எதிராக பாவம் செய்ததினால் முதல் பிறந்தவன் என்ற உரிமையை இழந்தான். முதலில் பிறந்தவன் புறக்கணிக்கப்பட்டு, இரண்டாவது பிறந்தவன் ஏற்றுக்கொள்ளப்பட்டான். வேதாகமம் முழுவதும் இக்கருத்து காணப்படுகிறது. முதலில் ஆதாம் பூரண மனுஷனாக சிருஷ்டிக்கப்பட்டு, பரிபூரணமான மனுக்குலத்திற்கும் தந்தை என்ற நிலையைப் பெற்றார். ஆனால், ஆதாம் கீழ்ப்படியாதபோது, அந்த உரிமை இயேசுவின் மேல் விழுந்தது. இயேசுவும் இரண்டாம் ஆதாமானார். ஆகவே, "அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்" (1 கொரி. 15:45) என்று எழுதியிருக்கிறது.

யாக்கோபு , யூதாவுக்கு அளித்த ஆசீர்வாதங்கள் நான்கு பகுதிகளாகக் காணப படுகிறது. இது துவக்கத்தில் யாக்கோபின் குமாரனுக்கு பொருந்தக்கூடியதாக இருந்தாலும், யூதா பாலசிங்கம் என்ற அவருடைய முதல் வாக்கியம் வெளிப்படுத்தின புத்தகத்தின் ஐந்தாம் அதிகாரத்தில் காணப்படும் அந்த சுருளை எடுக்கக்கூடிய சிங்கம் - இயேசுவுக்குள் நிறை வேற்றப்படும் ஆசீர்வாதங்களைக் குறிப்பிடுகிறது.

(1) யூதா ஒரு தலைவராக இருப்பார்.

(2) யூதா தம்முடைய எதிரிகளை சிறைபிடிப்பார்.

(3) யூதா இராஜரீகமானவர்.

(4) வாழ்க்கையில் யூதாவின் பாத்திரம் மாற்றமடையும்.

**யூதா, தலைவர்**

கொடூரமான பஞ்சத்தின் போது, யாக்கோபின் குமாரர்கள் உணவைத் தேடி எகிப்துக்குச்

சென்றபோது, பார்வோனின் சாம்ராஜ்யத்தை ஆட்சி செய்துகொண்டிருந்த தங்களுடைய சகோதரனாகிய யோசேப்புக்கு முன் நின்றார்கள். ஆயினும், பல வருடங்களுக்கு முன் அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு இவர் தான் என்று அறியாதிருந்தார்கள். இவர்கள் அனைவரும் இணைவதற்கு முன் யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை தானியத்தோடும், யாக்கோபினால் அதிகம் நேசிக்கப்பட்ட பென்யமீனின் சாக்கில்அவருடைய வெள்ளிப்பாத்திரத்தை வைத்து அனுப்பினார். யோசேப்பு தன்னை வெளிப் படுத்துவதற்கு முன் அவர்களுடைய சகோதரர்களின் உத்தமத்தை சோதிக்கும்படி ஒரு திட்டமாக இருந்தது. பென்யமீனின் சாக்கில் அவருடைய வெள்ளிப்பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டபோது, ஒரு திருடனைப்போல யோசேப்பிடத்திற்கு இழுத்து வந்தார்கள். "யூதா மற்றும் அவர்கள் சகோதரர்களும் யோசேப்பின் வீட்டிற்கு வந்து... யோசேப்பின் பாதத்தில் விழுந்தார்கள்."

"யூதாவும் அவன் சகோதரரும் யோசேப்பின் வீட்டுக்குப் போனார்கள். யோசேப்பு அதுவரையும் அங்கே இருந்தான்; அவனுக்கு முன்பாகத் தரையிலே விழுந்தார்கள். யோசேப்பு அவர்களை நோக்கி: நீங்கள் என்ன காரியம் செய்தீர்கள்? என்னைப்போலொத்த மனிதனுக்கு ஞானதிருஷ்டியினால் காரியம் தெரியவரும் என்று அறியாமற்போனீர்களா என்றான். அதற்கு யூதா: என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப்பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப்பண்ணினார்; பாத்திரத்தை வைத்திருக்கிறவனும் நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள் என்றான். அதற்கு அவன்: அப்படிப்பட்ட செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக; எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாயிருப்பான்; நீங்களோ சமாதானத்தோடே உங்கள் தகப்பனிடத்துக்குப் போங்கள் என்றான். அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து: ஆ, என் ஆண்டவனே, உமது அடியேன் உம்முடைய செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேட்பீராக; அடியேன்மேல் உமது கோபம் மூளாதிருப்பதாக; நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர்" (ஆதி. 44:14-18). யோசேப்பு தன்னை வெளிப்படுத்தின பின், யாக்கோபின் 12 குமாரர்களும் இணைந்தார்கள். அதற்குப் பின் பஞ்சத்திலிருந்து தப்பித்துக்கொள்ள எகிப்தில் குடியிருக்கும்படி அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

பல வருடங்களுக்குப் பின் எகிப்தை விட்டு இஸ்ரயேலர்கள் கானானுக்குப் புறப்பட்ட போது, யூதா கோத்திரமே முதலில் அணியாகச் சென்றனர். "யூதா சந்ததியாருடைய பாளயத்தின் கொடி அவர்கள் சேனைகளோடே முதல் புறப்பட்டது; அவனுடைய சேனைக்கு அம்மினதாபின் குமாரன் நகசோன் தலைவனாயிருந்தான்" (எண். 10:14).

நாற்பது வருடங்களுக்குப் பின் இஸ்ரயேலின் அடுத்த தலைமுறை வடதிசையில் வனாந்தரத்தில் அலைந்தபின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடைந்தார்கள். அப்பொழுதும் யூதா கோத்திரம் முதல் பங்கை பெற்றது. "யூதா புத்திரரின் கோத்திரத்திற்கு அவர்களுடைய வம்சங்களின்படி உண்டான பங்குவீதமாவது: ஏதோமின் எல்லைக்கு அருகான சீன்வனாந்தரமே தென்புறத்தின் கடையெல்லை" (யோசு. 15:1).

எல்லா மனுஷர் மேலும் ஆண்டவராம் இயேசு முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறார். பாவத்திலிருந்து இந்த உலகத்தை மீட்பதற்காக அவர் இந்த பூமியில் பிறந்தார். ஆதாமுக்கு தன்னை ஈடுபலியாகக் கொடுத்து தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு அனைத்து மனுஷருக்கும் வாய்ப்பளித்தார். மரித்தோரிலிருந்து முதற்பலனாக அவர் உயிர்த்தெழுப்பப்பட்டார். "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" (1 கொரி. 15:20). உயிர்த் தெழுதலின் போது திவ்விய சுபாவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவரே முதலானவர். விசுவாசமுள்ள அவருடைய சீஷர்களுக்கும் கூட அவர் வாக்களித்திருக்கிறார் ( 2 பேது. 1:4).

சீன் வனாந்தரத்தில் இஸ்ரயேலர்கள் பாளயம் இறங்கினபோது, அவர்கள் தங்களுடைய கூடாரங்களை ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றி அமைத்திருந்தார்கள். அதில் யூதா கோத்திரம்

கிழக்கு பக்கமாய் கூடாரம் அமைந்திருந்தது. "கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய வம்சத்தின் விருதாகிய தங்கள் கொடியண்டையிலே தங்கள் கூடாரங்களைப் போட்டு, ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதிராகச் சுற்றிலும் பாளயமிறங்கக்கடவர்கள். யூதாவின் பாளத்துக் கொடியையுடைய சேனைகள் சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே பாளயமிறங்கவேண்டும்; அம்மினதாபின் குமாரனாகிய நகசோன் யூதாசந்ததிக்குச் சேனாபதியாயிருக்கக்கடவன்" (எண். 2:1-3).

இயேசு தம்முடைய இரண்டாம் வருகையில் கிழக்கிலிருந்து மேற்குவரைக்கும் காணப்படும் ஒரு மின்னலுக்கு ஒப்பிடப்படுகிறார். (astrape மிகுந்த வெளிச்சம் - Strongs 796) "மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்" (மத். 24:27). கிழக்கிலிருந்து மேற்கில் வீசப்படும் சூரியனின் பிரகாசமான வெளிச்சம் இந்த முழு உலகத்திற்கும் இயேசுவின் இரண்டாம் வருகையின் போது படிப்படியாக ஒளியைக் கொடுக்கக்கூடிய காரியத்தை அடையாளப்படுத்துகிறது.

எண்ணாகமம் 1மற்றும் 26-ம் அதிகாரங்களில் விவரங்களைப் பார்க்கும்பொழுது, இஸ்ரயேல் கோத்திரங்களில் யூதா பிரபலமான கோத்திரமாகக் கருதப்படுகிறது. பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த இஸ்ரயேலர்கள் யூதேயா என்றழைக்கப்படும் இஸ்ரயேல் தேசத்தின் ஒரு பகுதியில் குடியேறினார்கள். இதுவும் யூதாவின் பேரோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. பொதுவாக இஸ்ரயேலர்கள் யூதர்கள் என்று அழைக்கப்பட்டனர். இயேசுவின் நாட்களில் எபிரெயர்கள், இஸ்ரயேலர்கள் மற்றும் யூதர்கள் என்ற சொல் அவர்களுக்கு வழங்கப்பட்டது. பவுல் பென்யமீன் கோத்திரத்தில் பிறந்திருந்தாலும், இம்மூன்று வார்த்தைகளையும் அவர் பயன்படுத்தினார் (அப். 22:3; ரோ. 11:1; பிலி. 3:5).

ஆயிரம் வருஷத்தில் இயேசு அவருடைய சீஷர்களோடு இணைந்து புதிய யுகத்தின் வல்லமையுள்ள அதிகாரிகளாவார்கள். உயிர்த்தெழுப்பப்பட்ட பல கோடிக்கணக்காக ஜனங்களை தேவனோடு ஒப்புரவாக்குவதற்கு இந்த சபை தலைமை பொறுப்புகளில் ஒன்றாகும். தேவனிடத்தில் வரக்கூடிய யாவரும் இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**யூதா, ஜெயித்தவர்**

"அவனுடைய கை எதிராளிகளின் பிடறியின் மேல் இருக்கும்" என்று யாக்கோபு யூதாவை குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார். ஒரு எதிராளியின் பிடறியில் கை வைப்பது - அந்த எதிராளியை தன்னுடைய முழங்காலுக்குக் கீழ் கொண்டுவந்து அவனை கீழ்ப்படுத்துதல் என்று பொருளாகும். வேதாகமத்தில் குறிப்பிடும் போர்களில் சிறைப்பிடிக்கப்பட்ட எதிராளியின் பிடறியின்மேல் ஒருவர் நிற்பது - வெற்றியை அடையாளமாகக் குறிப்பிடும் (யோசு. 10:24). யூதா கோத்திரத்தில் பிறந்த தாவீது, யேகோவா தேவனால் நியமிக்கப்பட்ட இராஜாவாகவும், பெலிஸ்தியர்கள், மோவாபியர்கள், அம்மோனியர்கள் மற்றும் ஏதோமியர்களைப் போரிட்டு ஜெயிக்கக்கூடிய இஸ்ரயேலின் சிறந்த போர்வீரராகவும் இருந்தார். ஆயினும், அவருடைய குமாரனாகிய சாலொமோன், தம்முடைய சமாதான ஆட்சியில் இராஜ்யத்தின் எல்லைகளை விஸ்தாரப்படுத்தினார் (1 இரா. 4:20-25). தேவனை தொழுது கொள்வதற்கு இதுவரையிலும் கட்டப்படாததும், இனிமேலும் கட்டமுடியாததுமான ஒரு அற்புதமான ஆலயத்தை சாலொமோன் கட்டினார்.

ஜெயம் கொண்ட இயேசு வெளிப்படுத்தின விசேஷத்தின் கதாநாயகன் ஆனார். "நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்" (வெளி. 6:2). அவருடைய முதல் வருகையில் இயேசு தன்னுடைய ஜீவனை ஈடுகிரயமாக செலுத்தி, உலகத்தின் மனுக்குலத்தை விலைக்கு வாங்கினார். விலைக்கு வாங்கப்பட்ட மனுக்குலத்தை ஆட்சி செய்வதற்கு ஆயிரம் வருஷம் ஆட்சிவரைக்கும் அவர் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. ஏனெனில், காத்திருக்கும் அந்த காலத்தில்அவரோடுகூட ஆட்சி செய்வதற்கு ஏற்ற பங்காளிகளைத் தேர்வு செய்ய

வேண்டியதாயிருந்தது (லூக். 12:32). எதிராளிகளின் மேல் ஜெயம் கொள்ளக்கூடிய இயேசுவை, வெளிப்படுத்தின விசேஷத்தின் துவக்கம் சித்தரிக்கிறது.

தேவனையும் அவருடைய இராஜ்யத்தையும் எதிர்க்கக்கூடிய யாவரோடும் இயேசு ஆயிரம் வருஷம் ஆட்சியில் நேரடியாக தொடர்பு கொள்வார். முடிவில் அவர் மரணத்தையும் நிக்கிரகம் பண்ணுவார் (1 கொரி. 15:24-26).

எதிர்த்து நிற்கும் சகல அதிகாரங்களும், ஆட்சிகளும் கீழ்ப்படுத்தப்படும்பொழுது, "தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசா. 9:7) என்று ஏசாயாவினால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் உணர்ந்து கொள்ளப்படும்.

### யூதாவின் இராஜரீக வம்சம்

"சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்" (ஆதி. 49:10).

ஆட்சிக்குரிய உரிமை யூதாவின் வம்சவழியாக வந்தது. தேவனுடைய வழிநடத்துதலுக்கு எதிராக இஸ்ரயேல் ஜனங்கள் தேவனிடத்தில் ஒரு இராஜவுக்காக மன்றாடினபோது, சீட்டுப்போடப்பட்டு பென்யமின் கோத்திரத்தானாகிய சவுல் இராஜாவாக நியமிக்கப்பட்டார் (1சாமு. 10:19-20). ஆயினும், அமலேக்கியர்களையும் ஆகாப் இராஜாவையும் அழிக்காமல் விட்டுவிட்டதால் சவுலின் கீழ்ப்படியாமையினிமித்தம் தேவன் அவரைப் புறக்கணித்தார் (1 சாமு. 15:10-11).

சவுலுக்கு பதிலாக யூதா கோத்திரத்தானாகிய தாவீதை இஸ்ரயேலின் மேல் இராஜாவாக நியமிப்பதற்கு தேவன் எப்போதும் நோக்கம் கொண்டிருந்தார் "ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தான்; அவன் சிவந்தமேனியும், அழகிய கண்களும் நல்ல ரூபமுள்ளவனுமாயிருந்தான். அப்பொழுது கர்த்தர்: இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம்பண்ணு என்றார். அப்பொழுது சாமுவேல்: தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான்; அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்; சாமுவேல் எழுந்து ராமாவுக்குப் போய்விட்டான்" (1 சாமு. 16:12-13).

இயேசு சிலுவையில் அறைவதற்கு சில நாட்களுக்கு முன் இஸ்ரயேலர்களுக்கு இராஜாவாகக் கொடுக்கப்பட்டார். அவரை புறக்கணித்த தினிமித்தம் புறஜாதிகளுக்கு இந்த வாய்ப்பு கொடுக்கப்படும் என்று முன்னறிவிக்கப்பட்டது. ஆயினும், வருங்காலத்தில் இஸ்ரயேல் மட்டுமல்ல, இந்த முழு உலகமும் அவரை இராஜாவாக அங்கீகரித்துக் கொள்ளும் "அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல; அவரைத் தரிசிப்பேன், சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்; அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி, சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும்" (எண். 24:17).

### யூதாவின் நிலைமாற்றம்

"சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்" (ஆதி. 49:10).

சீலோ என்பது என்ன? அல்லது யார்? இதற்கு மூன்று கூடுமான பதில்கள் உண்டு.

(1) இஸ்ரயேலின் ஒரு பட்டணத்தின் பெயர்.

(2) வரக்கூடிய மேசியா

(3) மேசியாவின் தனிப்பட்ட ஒரு பெயர்

(1) சீலோ என்பது, இஸ்ரயேலின் ஒரு பட்டணத்தின் பெயராகும். யூதர்களின் தோரா புத்தகத்தில் (நியாயப்பிரமாணம்) தீர்க்கதரிசிகள் "அவர் சீலோவுக்கு வரும் வரையில்" (வச. 10) என்று டனக் (TANAKH) மொழிபெயர்ப்பு கூறுகிறது. இப்படியாக, இஸ்ரயேலிலுள்ள பட்டணத்திற்கும்,

மேசியாவுக்கும் தொடர்பு உள்ளதொன்று மொழிபெயர்ப்பாளர்கள் காட்டுகின்றனர். இஸ்ரயேலர்கள் யோர்தானைக் கடந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசித்தபோது, ஆசரிப்புக்கூடாரம் முதன்முதலில் சீலோ என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. "இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் சீலோவிலே கூடி, அங்கே ஆசரிப்புக் கூடாரத்தை நிறுத்தினார்கள்" (யோசு. 18:1). இக்காரியத்திற்கு ஒரு எதிரான சிந்தை உண்டு. ஆயினும், டனக் (TANAKH) என்ற பதில் மொழி பெயர்ப்புக்கு ஆதாரமில்லாததினால் இக்காரியம் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.

(2) வரக்கூடிய மேசியா; செப்துவாஜின் (Septuagint) மொழிபெயர்ப்பின் அடிப்படையில் "உரிமையைப் பெறுவதற்கு உரிமைக்காரர் வரும்வரையில்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வார்த்தைகளை மற்றொரு தீர்க்கதரிசனத்திலும் நாம் காணலாம். "அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே. 21:27). இக்காரியத்தை ஏற்றுக்கொள்ளாததற்கு தடையாக எபிரெய மொழியில் ஒரு எழுத்து மாற்றப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. (NIV வேதாகமத்தின் அடி குறிப்புகளில் இவைகளைக் காணலாம்).

(3) மேசியாவுக்குரிய தனிப்பட்ட நாமம். யூதர்களின் தால்மட் (Talmud) பூமியின் மேல் சமாதானத்தைக் கொண்டுவரும் மேசியாவிற்கு சீலோ என்ற பெயர் உள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. இந்த வார்த்தை ஷாலோம் என்ற எபிரெய வார்த்தையிலிருந்து எடுக்கப்படுகிறது என்று கருதப்படுகிறது. மேலும், சமாதான நகரமாகிய எருசலேம் என்ற வார்த்தையின் மூலமும் இதுவே. எல்லாவற்றிற்கும் மேலாக, "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்"(ஏசா. 9:6-7) என்று ஏசாயாவின் தீர்க்கதரிசனம் இதற்கு ஆதாரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

உண்மையில் இயேசு யூதா கோத்திரத்தின் சிங்கமாக ஆயிரம் வருஷமான தன்னுடைய ஆட்சியில் சமாதானத்தைக் கொண்டுவருவார். மனுஷரை சீர்ப்பொருந்தக்கூடிய இரட்சகரின் வாக்குத்தத்த வசனங்களில் எவ்வாறு துல்லியமாகக் காட்டப்பட்டது என்று பார்க்கலாம்.

- ஆதி. 3:15 - ஆதாமின் வழியாக மீட்பர் வரலாம்.
- ஆதி. 9:26 - சேமின் வழியாக மீட்பர் வரலாம்.
- ஆதி. 12:3 - ஆபிரகாமின் வழியாக மீட்பர் வரலாம்.
- ஆதி. 21:12 - ஈசாக்கின் வழியாக மீட்பர் வரலாம்.
- ஆதி. 25:23 - யாக்கோபின் வழியாக மீட்பர் வரலாம்.
- ஆதி. 49:10 - யூதாவின் வழியாக மீட்பர் வரலாம்.
- 2 சாமு. 7:12-16 - தாவீதின் வழியாக மீட்பர் வரலாம்.
- மீகா 5:2 - இரட்சகரும் மீட்பருமானவர் யூதாவிலுள்ள பெத்லகேமில் பிறப்பார்.
- ஓசி. 11:1 - மீட்பர் எகிப்துக்கு செல்வார்.
- ஏசா. 11:1 - மீட்பர் நாசரேத்திலிருந்து வருவார்.

பழைய ஏற்பாடு முழுவதிலும் காணப்படும் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும்படியாகவும், இயேசு கிறிஸ்துவின் வருகையை ஆவலோடு எதிர்நோக்கினவர்கள். எடுத்துக்காட்டாக, மத்தேயு 2:10)-ல் சொல்லப்பட்டுள்ள சாஸ்திரிகளைப் போல, எதிர்பார்த்தவர்களின் நம்பிக்கைகளையும் நிறைவேற்றும் படியாக மத்தேயு மற்றும் லூக்கா

சுவிசேஷங்களில் கொடுக்கப்பட்ட வம்சவரலாறில் இயேசுவைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. ஏரோது ஆலயத்தை கிபி 70-ல் முற்றிலுமாக அழித்தபோது, எல்லாவிதமான வரலாற்று பதிவுகளும் அழிக்கப்பட்டது. ஒருவரும் தாவீது மற்றும் யூதா வம்சத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த சுவிசேஷங்கள் மட்டுமே இயேசுவின் பிறப்பை சரியாக வம்சவரலாற்றின் வரிசையில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இயேசு ஜெயம் கொள்ளக்கூடிய வேலையையும், ஆசீர்வதிக்கக்கூடிய வேலையையும் துவங்க திரும்பி வந்தார். தேவ ஆட்டுக்குட்டியாக உலகத்தின் பாவத்தைப் போக்கினார். யூதா கோத்திரத்தின் ஜெயம் பெற்ற சிங்கமாக குழப்பம் நிறைந்த உலகத்தை கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கால அவகாசத்தில் முந்தின சீருக்குக் கொண்டுவந்து யேகோவா தேவனுக்கு முன் அதை நிறுத்துவார்.

"என் தாசனாகிய தாவீதைக்கண்டு பிடித்தேன்; என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம்பண்ணினேன். என் கை அவனோடே உறுதியாயிருக்கும்; என் புயம் அவனைப் பலப்படுத்தும். சத்துரு அவனை நெருக்குவதில்லை; நியாயக்கேட்டின்மகன் அவனை ஒடுக்குவதில்லை. அவன் சத்துருக்களை அவனுக்கு முன்பாக மடங்கடித்து, அவனைப் பகைக்கிறவர்களை வெட்டுவேன். என் உண்மையும் என் கிருபையும் அவனோடிருக்கும்; என் நாமத்தினால் அவன் கொம்பு உயரும். அவன் கையைச் சமுத்திரத்தின் மேலும், அவன் வலதுகரத்தை ஆறுகள் மேலும் ஆளும்படி வைப்பேன். அவன் என்னை நோக்கி: நீர் என் பிதா, என் தேவன், என் இரட்சிப்பின் கன்மலையென்று சொல்லுவான். நான் அவனை எனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன். என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காகக் காப்பேன்; என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிப்படுத்தப்படும். அவன் சந்ததி என்றென்றைக்கும் நிலைத்திருக்கவும், அவன் ராஜாசனம் வானங்களுள்ளமட்டும் நிலைநிற்கவும் செய்வேன்" (சங். 89:20-29).

சொந்த இருதயத்தில் வளர்ச்சியடைவதைக் காணலாம்.

"நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்" (2 கொரி. 1:3-4).

நம்முடைய வாழ்கையில் நாம் அனுபவிக்கும் சோதனைகள், பிரச்சனைகள் மற்றும் உபத்திரவங்களின் வழியாகப்பெரும் பாடங்களினால் மற்றவர்களின் சோதனைகளிலும், கஷ்டங்களிலும் ஆறுதலளிக்கக்கூடிய ஆண்டவரின் சிறப்பான தேர்ச்சிப்பெற்ற பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.

துக்கிப்பவர்களின் விடுதலை



# ஆறுதலின் ஊழியம்

"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரகவருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச்சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்" (ஏசா. 61:1-3).

C.T. Russell

மிக ஆழமாகவும், மிக விரிவாகவும் நற்செய்திகளை நம்முடைய வேதபகுதி கொண்டுள்ளது. சீயோனாகிய அர்ப்பணிக்கப்பட்ட சபைக்கு மாத்திரமல்ல, துக்கிக்க கூடிய அனைவருக்கும் இது ஆறுதலின் செய்தியாக உள்ளது. நாம் நம்முடைய கண்களை சற்று இந்த உலகத்தின் மீது திருப்பினால் மனுக்குலத்தின் திரளான ஜனங்கள் அநேகவிதமான துக்கங்களில் மூழ்கிக்கொண்டிருப்பதினால் நம்முடைய சிந்தைகள் ஆழமாக அழுத்தப்படுகிறது. நம்முடைய அப்போஸ்தலர் கூறுகிறபடி, "ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது" (ரோ. 8:22).

வெகு சிலர் முழுமையாக, திருப்தியடைந்து எதற்காகவும் துக்கிக்காமல் இந்நிலையில் இருப்பவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீவாதங்களுக்கும், விலக்கப்பட்டவர்களுமா யிருக்கிறார்கள். சிலர் இந்த உலகத்தில் ஐசுவரியவான்களாக, எந்த காரியத்திற்கும் அவசியமில்லாதவர்களாக தாங்கள் மகிழ்ச்சியாயிருப்பதற்கு சுறுசுறுப்பான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். மற்ற சிலர் ஐசுவரியவான்களாக இல்லாதபோதிலும், பெற்றிருப்பவைகளில் திருப்தியடைகிறார்கள். ஆயினும், அவர்கள் தங்களை பாவிகள் என்று உணராமல் அபூரண நிலையை உணராதவர்களாகவும் ஒரு இரட்சகர் தங்களுக்கு தேவை என்பதையும் அறியாதிருக்கிறார்கள். அவர்கள் எதற்காகவும் கவலைப்படாததினால், தேவன் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்கள் மற்றும் வாக்குறுதிகளைக் கொடுத்து, அவர்களை ஆறுதல்படுத்துவது அவசியமில்லதிருக்கிறது.

வருங்காலத்தில் துக்கிக்கக்கூடிய அனைவருக்கும் ஆறுதல் அளித்து தேவனுடைய ஆசீர்வாதங்களின் கீழ் வரவழைத்து கிறிஸ்துவுக்குள் தேவன் கொடுக்கும் இயேசுவின் ஊழியத்தின் ஆறுதல்களைக் கொடுப்பதே பிரதான வேலையாகும் - எல்லா உபத்திரவங்களுக்கும், பாவங்களுக்கும், அபூர்ணமான நிலைக்கும் நல்ல ஔஷதமாயிருக்கும். ஆனால், பரிதாபமான உலகம் இந்த உலகத்தின் அதிபதியினால் குருடாக்கப்பட்டதினிமித்தம் அவர்களுக்காக தேவன் வைத்திருக்கும் அற்புதமான காரியங்களைப் பார்க்கவும், கேட்கவும் அதை புரிந்துகொள்வதற்கும் இயலாதிருப்பதினால் இப்படிப்பட்ட ஆறுதலையும் பெற்றுக் கொள்ளாதிருக கிறார்கள். ஆனால், சீயோனை பொறுத்தவரையில், அர்ப்பணிக்கப்பட்ட சபை இப்பொழுது ஆறுதல் பெறக்கூடிய சிறப்புரிமையைப் பெற்றிருக்கிறது. முதலாவது அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்ற அறிவே அவர்களுக்கு தேவைப்படும் ஆறுதல். இனி ஒருபோதும் அவர்கள் பரதேசிகளும், அந்நியர்களுமாயிராமல், ஆண்டவரோடு பாடுபட்டால், கிறிஸ்துவினுடைய உடன்சுதந்தரர்களாகவும், தேவனுடைய புத்திரர்களாகவும் இருப்பார்கள். நம்முடைய ஆண்டவர் மிகுந்த இரக்கமுள்ளவர் என்ற ஆறுதலும் இப்பொழுது அதிகமாகத் தேவைப்படுகிறது (யாக். 5:11). மேலும், ஒருவர் ஒரு தவறுக்குள் விழுந்துவிட்டால், அவர் முற்றிலுமாக

புறக்கணிக்கப்படாமல், மீண்டும் சீர்ப்பொருந்தப் படுகிறார் (சங். 37:24).

சீயோனின் பிள்ளைகள் இப்படிப்பட்ட ஆறுதலைப் பெறாவிட்டால், அவர்கள் சோர்வடைந்து, பலவீனப்பட்டு, வழியில் மயங்கிவிழுவார்கள். ஆகவே, ஆண்டவர் இப்படிப்பட்ட ஆறுதலான வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார். முடிவுமட்டும் விசுவாசத்தினால், கிறிஸ்துவுக்குள் நிலைத்து நின்று, பெற்ற சத்தியத்திற்கு கூடுமானவரை கீழ்ப்படிதலைக் காண்பிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஆறுதல்களையும், தேறுதல்களையும் பெறாத கிறிஸ்தவர்கள் உண்டா? இப்படிப்பட்ட ஆறுதல்களின்றி அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது.

பரலோக பிதா மற்றும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் ஐக்கியத்தினால் மட்டுமே நாம் இப்படிப்பட்ட ஆறுதல்களைப் பெறுகிறோம். நாம் சகலவிதங்களிலும் அபூரணர்களாக இருக்கிறோம் என்பதை ஆண்டவர் அறிந்திருந்தாலும், அவர் நம் மேல் இரக்கமுள்ளவராக நம்முடைய எல்லா பாவங்களுக்கும் கல்வாரியில் தம்முடைய ஜீவனையே பலி செலுத்தி நமக்கு ஆறுதல் அளித்திருக்கிறார். தோல்விகள், தவறுகள் அனைத்தையும் தம்முடைய ஐசுவரியமுள்ள கிருபையினால் மூடி, ஒவ்வொருவரையும் தேவனுடைய புத்திரர்களாக அங்கீகரிக்கிறார். எப்படிப்பட்ட ஆறுதல்! எப்படிப்பட்ட தேறுதல்! பிதாவோடும் குமாரனோடும் பெற்றிருக்கும் ஐக்கியத்தில் எப்படிப்பட்ட சிறப்புரிமைகளைப் பெற்றிருக்கிறோம்!

இந்த ஆறுதல் பரிசுத்த ஆவியினால் நமக்குள் வருகிறது. இவ்வழியாகவே நாம் ஆறுதலைப் பெறுவதினால், இது தேற்றரவாளன் என்று அழைக்கப்படுகிறது (யோவா. 14:26). பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பவர்கள் நிச்சயமாக ஆறுதலைப் பெற்றிருப்பார்கள். பரிசுத்த ஆவியைப் பெறாதவர்கள் இந்த ஆறுதலையும் பெறாதிருப்பார்கள். ஆண்டவரின் ஆவியைப் பெற்றால் மட்டுமே அவருடைய அன்பு, இரக்கம், ஆறுதல் இன்னும் நமக்கு அளிக்கக்கூடிய சகல காரியங்களின் ஆழங்களையும், உயரங்களையும் புரிந்துகொள்ள முடியும்.

பரிசுத்த ஆவியின் ஆறுதல் வசனங்களின் வழியாக நம்மை வந்து சேருகிறது. ஏனெனில், தேவனுடைய கிருபையின் அறிவையும், சகலவிதமான ஆறுதல்களும் நமக்கு இந்த வசனங்கள் வழியாகவே வருகிறது. "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோ.15:4).

இந்த ஆறுதல் மிகுதியான அளவில் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்துக் கொள்ளப்படுகிறது. "இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" (1 தெச. 4:18). அதுபோல, சகோதரர்களின் இருயதயங்களுக்கு ஆறுதலளிக்கும்படி, அப்போஸ்தலனாகிய பவுல், தீமோத்தேயுவை எபேசு மற்றும் கொலோசெயர் பட்டணத்திற்கு அனுப்பினார்.

அவர்களின் கவனத்தை தேவனுடைய வார்த்தைகளாகிய விலையேறப் பெற்றதும், விசேஷித்ததுமான வாக்குத்தத்தங்களுக்கு திருப்புவதே இதின் முக்கிய கருத்தாகும். இப்படியாக, அவர் கொடுத்த வாக்குத்தத்தினிமித்தமாக மட்டுமல்ல, வாக்குத்தத்தத்தைக் கொடுத்தவர் மேல் கொண்டுள்ள அன்பையும், இரக்கத்தையும் பக்தியினிமித்தமாகவும், இவர்கள் அனைத்து வாக்குத்தத்தத்தையும் பானம் பண்ணி, ஆறுதலடைய வேண்டும் என்று அவர் விரும்பினார்.

தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபத்தில், "இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தைப்பற்றி உங்களுக்குப் புத்திசொல்லவும், நம்முடைய சகோதரனும் தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன்வேலையாளுமாகிய தீமோத்தேயுவை அனுப்பினோம். இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே. நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்தபோது, உங்களுக்கு முன்னறிவித்தோம்; அப்படியே வந்து

நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள். ஆகையால், நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட் படுத்தின துண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன்" (1 தெச. 3:2-5) என்று அப்போஸ்தலனாகிய பவுல், தீமோத்தேயுவை அனுப்பின காரியத்தைக் குறிப்பிடுகிறார்.

ஒருமுறை பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்ட விசுவாசத்தில் எல்லா நிபந்தனைகளையும், நம்முடைய உடன்படிக்கையை தெளிவாக மனதில் கொண்டவர்களாக, பயணத்தின் முடிவில் வாக்களிக்கப்பட்ட வெகுமதியே, சீயோனின் பிள்ளைகள் சோதனையின் போது நல்ல போர் வீரர்களாக சகலத்தையும் சகிக்கக்கூடிய ஆறுதலை இன்று நாம் பெறக்கூடிய ஆறுதலுக்கு ஆதாரம் என்று மீண்டும் கூறப்படுகிறது. இந்த ஆறுதல் ஆண்டவரிடத்திலிருந்து பரிசுத்த ஆவியின் வழியாக தொடர்ந்து, பவுலின் வழியாக மற்றும் தீமோத்தேயுவின் வழியாக சபையோரிடம் சேர்ந்தது. "நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்" (1 தெச. 5:11) என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

தேவனுடைய ஜனங்கள் அனைவரும் அவருடைய பிரதிநிதிகளாகவும், தூதுவர்களாகவும், இராஜ்யத்தில் துக்கிக்கக்கூடிய அனைவருக்கும் ஆறுதலளிக்கக்கூடிய சிறப்புரிமை மட்டுமல்ல, நீதியின் விருட்சங்களாக இருந்து அவைகளின் இலைகள் ஜாதிகளுக்கு ஆரோக்கியத்தை அளிக்கக்கூடிவர்களாகவும் இருப்பார்கள், (வெளி. 22:2). ஆனால், இக்காலத்தில் சீயோனில் துக்கிக்கக்கூடிய அனைவரும் ஆறதலளிக்கக் கூடிய ஊழியத்தைப் பெற்றிருக் கிறார்கள். தேவ ஜனங்கள் எப்படிப்பட்ட உபத்திரவத்திலும், மனரீதியான அல்லது உடல் ரீதியான பிரச்சனைகளிலும், வியாதிகளிலிருப்பவர் களுக்கும் ஆறுதலளிக்கக் கடமைப்பட்டிருக் கிறோம். இப்பொழுது, இப்படிப்பட்ட ஆவியினால் நிரப்பப்பட்டால், துக்கிப்பவர்களுக்கு ஆறுதலளித்து, நொறுங்குண்ட இருதயங்களைக் கட்டுவதற்கு அவர்கள் சிறப்புரிமையைப் பெற்றிருப்பார்கள். ஒருவர் சத்தியத்தின் ஆவியையும், ஆண்டவரின் ஆவியையும், அன்பின் ஆவியையும் அதிக அளவில் பெறாவிட்டால் இப்படிப்பட்ட உதவிகளையும், ஆறுதல்களையும் விசுவாச வீட்டாருக்கு அளித்து, அவைகளை வளர்ச்சிக்குள் ஊக்குவிக்க இயலாது. ஆகவே, சகோதரர்களுக்கு உதவி செய்து ஒவ்வொருவருக்கும் ஆறுதலளித்து பெலனளிக்கக்கூடிய சிறப்புரிமையை ஒவ்வொருவரும் தங்களுக்குள் வளர்த்துக் கொண்டால், அதற்கு ஏற்றவாறு அன்பின் ஆவி அதிக அளவில் தன்னுடைய சொந்த இருதயத்தில் வளர்ச்சியடைவதைக் காணலாம்.

"நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிற வருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும் படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்" (2 கொரி. 1:3-4).

நம்முடைய வாழ்கையில் நாம் அனுபவிக்கும் சோதனைகள், பிரச்சனைகள் மற்றும் உபத்திரவங்களின் வழியாகப்பெரும் பாடங்களினால் மற்றவர்களின் சோதனைகளிலும், கஷ்டங்களிலும் ஆறுதலளிக்கக்கூடிய ஆண்டவரின் சிறப்பான தேர்ச்சிப்பெற்ற பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.

## தீர்க்கதரிசனத்தில் இன்று

# விடுதலைக்கான நீண்ட பயணம்

"அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார் (சங். 145:19).

டிசம்பர் 5, 2013, அன்று தெற்கு ஆப்பிரிக்காவின் முன்னால் ஜனாதிபதியான நெல்சன் மண்டேலாவின் மரணத்தைத் தொடர்ந்து அவருடைய சுய சரிதையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படம் “Long Walk to Freedom.” அவருடைய இனத்திற்கு நடந்த அநீதிகளை எதிர்த்து தன் வாழ்நாள் முழுவதும் போராடினதால் அவர் அமைதிக்கான நோபல் பரிசு வென்றார். இதன் காரணமாய் பலருக்கு அவர் ஒரு சர்வதேச நாயகனாய் திகழ்ந்தார். ஆப்பிரிக்கா தேசிய காங்கிரஸின் ஜனாதிபதியாகவும், தென் ஆப்பிரிக்காவின் இன ஒதுக்கீட்டுக்கு எதிரான இயக்கத்திலும் அவர் தலைவராய் இருந்தார். வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருந்தும், இன ஒதுக்கீட்டு சம்பந்தப்பட்ட கொள்கையிலிருந்தும் தனது தேசத்தை வெளியே கொண்டுவருவதில் ஒரு மிக முக்கிய கருவியாய் திகழ்ந்தார். அவர் பொறுமைக்கும், மேன்மைக்கும் ஒரு சர்வதேச சின்னமாய் திகழ்ந்தார்.

Mandela Fort Hare University-ல், தமது கல்லூரி படிப்பைப் பயின்று, University of Witwatersrand-ல் சட்டம் பயின்றார். Johannesburg-ல், ஆப்பிரிக்கா தேசிய காங்கிரஸில் சேர்ந்து அதன் இளைஞர் அணியின் உறுப்பினரானார். 1952-ல் நடந்த இன ஒதுக்கீடு எதிர்ப்பு பிரசாரத்தின் மூலம் ANC-ல் மிக முக்கியமானவராய் எழுந்து, 1955-ல் ANC-யின் தலைவரானார். வழக்கறிஞராய் பணி புரிந்த அவர் ஆட்சிக்கு எதிரான பல செயல்களில் ஈடுபட்டு பலமுறை சிறைக்குச் சென்று வந்தார். ANC-யின் தலைவராய் இருந்ததால் பல வழக்குகள் அவர் மீது தொடுக்கப்பட்டு 1956 - 1961 வரைஅவர் Treason வழக்கிற்காக சிறையில் அடைக்கப்பட்டார். Marxism-ல் ஈர்க்கப்பட்டு இரகசியமாய் South African Communist Party (SACP)-யில் சேர்ந்து அதன் மத்திய குழுவில் ஒரு உறுப்பினராய் திகழ்ந்தார். துவக்கத்தில் அகிம்ஸை முறை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தாலும், 1961-ல், Umkhonto we Sizwe என்ற தீவிரவாத இயக்கத்தை SACP உடன் இணைந்து துவங்கினார். அதனை தொடர்ந்து அரசாங்கத்தின் கொள்கைகளை அழிக்கும் பல செயல்களில் ஈடுபட்டார். 1962-ல், நாட்டை நிலை குலையச் செய்யும் சதி திட்டத்தில் ஈடுபட்டதற்காகக் குற்றம் சாட்டப்பட்டு சிறையிடப்பட்டார். Rivonia விசாரனை மூலம் அது அவருக்கு ஆயுள் தண்டனையாக மாறியது. அப்பொழுது அவருக்கு வயது 44.

**A Change of Heart / மனமாற்றம்**

27 வருடங்கள் பல்வேறு சிறைச் சாலையில் இருந்தார். ஒரு தனி மனிதனால் பல மாறுதல்கள் ஏற்படுத்த இயலும் என்பதை மக்களுக்கு நிரூபிக்கும் வகையில் 1990-ல், மீண்டும் எழுப்பினார். அவர் சிறையில் இருந்த நாட்களில், வன்முறை, வெறுப்பு போன்ற பாதைகளை விட்டு விட்டு, அகிம்சை, அமைதி, எதிரிக்கு மன்னிப்பு போன்ற பாதையில் தன் வாழ்க்கையை மாற்றினார். அவர் சிறையில் இருந்தபொழுது, அவர் தாயாரின் அடக்கக் காரியங்களுக்கோ, கார் விபத்தில் இறந்த தன் மூத்த மகனின் இறுதி ஊர்வலத்திற்கோ செல்ல அவருக்கு அனுமதி கிடைக்காவிட்டாலும், தான் ஜனாதிபதியான போது, அதன் துவக்க விழாவிற்கு தனக்கு சிறையில் கண்காணிப்பாளாராய் இருந்த ஒரு வெள்ளையரை அதற்கு அழைத்திருந்தார். தனது சிறை வாழ்க்கை அனுபவம், பழிவாங்கும் ஆசைகளை எல்லாம் அடக்கிவிட்டது என்று கூறுகிறார். அவர் சிறையில் இருந்தபொழுது பல வெள்ளை காவலர் அவரிடம் பரிவுடன் நடந்துகொண்டு அவருக்கு செய்தித்தாள் மற்றும், உண்பதற்கு நிறைய உணவும் கொடுத்தார்கள். மேலும் அரசாங்கம் அவரை அணுகி பேச்சுவார்த்தைக்கு தயாராய் இருப்பதாய் கூறியது.

அவர் கருப்பு மனிதர்களைக் கொண்ட அரசாங்கத்தை உருவாக்கியபோது, அதில் தம்மை முன்னால் எதிர்த்த பல மனிதர்களை உறுப்பினராய் சேர்த்துக் கொண்டார். நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிக்கை 2007-ல், அவருடன் நடத்திய பேட்டி ஒன்றில், இவ்வளவு கொடுமையான வேதனைகளை அனுபவித்த பின்பு எப்படி அவரால் வெறுப்பை கட்டுப்படுத்த முடிகிறது என்று வினவினார். வெறுப்பு என்பது நம்முடைய மனதை ஒரு மேகம் போல் மறைத்து, நம் முன்னேற்றத்திற்கு ஒரு தடையாய் விளங்கும் என்று பதிலளித்தார். 1994-ல், அவருடைய சுயசரிதையில் இந்த கேள்விக்கான முழுமையான பதில் கிடைக்கும். ஒருவருடைய தோலின் நிறத்தினாலே, தன் பின்னணியினாலே, மதத்தாலோ, ஒருவர் பிறக்கும்பொழுதே மற்றவரை வெறுத்து பிறப்பதில்லை. மக்கள் வெறுப்பதை கற்றுக்கொள்ள வேண்டும், வெறுப்பதை கற்றுக்கொண்டால், அவர்களுக்கு அன்பு செய்ய கற்றுக்கொடுக்க முடியும். ஏனென்றால், வெறுப்பைவிட அன்பு என்பது மிக இயல்பாக ஒரு மனிதனுக்கு வரும் என்றார்.

மதத்தாலோ, ஒருவர் பிறக்கும்பொழுதே மற்றவரை வெறுத்து பிறப்பதில்லை. மக்கள் வெறுப்பதை கற்றுக்கொள்ள வேண்டும், வெறுப்பதை கற்றுக்கொண்டால், அவர்களுக்கு அன்பு செய்ய கற்றுக்கொடுக்க முடியும். ஏனென்றால், வெறுப்பைவிட அன்பு என்பது மிக இயல்பாக ஒரு மனிதனுக்கு வரும் என்றார்.

**தீமையை அனுமதித்தால் அது இருதயத்தை மாற்றிவிடும்**

சிறையில் அவருக்குக் கிடைத்த அனுபவத்தால் அவர் பல ஆதாயங்கள் அடைந்தார். அந்த அனுபவம் அவர் இருதயத்தை மாற்றியதால்தான் அவரால் சிறையிலிருந்து வெளிவந்த பின்பும் அவர் ஒரு பெரிய தலைவனாய் திகழ முடிந்தது. வெறுப்பினால் ஏற்பட்ட தீமையினை அவர் கற்றதால் அவர் எல்லா மனிதருக்கும் ஒரு எடுத்துக்காட்டாய் விளங்கினார். தீமையான ஒரு அனுபவம் தங்கள் வாழ்வில் வந்தபின் அதனால் பயனடைந்தவர்கள் ஒரு சிலரே. அவர்கள் இருதயத்தை தீமையிலிருந்து நன்மையும், வெறுப்பிலிருந்து அன்புமாக மாற்றியது. வேதத்தின்படி மரணத்தில் உறங்கிக்கொண்டிருக்கும் அனைவரும் விழித்தெழுவர். அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்பொழுது, தற்காலத்து வாழ்க்கையின் அனுபவத்தை தங்களுக்கு ஆதாயமாய் மாற்றிக்கொள்வர். அப்பொழுது, அவர்கள் தாங்களே தங்கள் சிறையிலிருந்து விடுதலைப் பெற்று தங்கள் சொந்த அனுபவத்தால் தங்கள் இருதயத்தை மாற்றி நல்லதொரு வாழ்க்கைப் பாதையை தேர்ந்தெடுப்பார்கள். துன்பம் தங்கள் வாழ்வை தீண்டும்பொழுது, பலர் தேவனை விட்டுவிலகி ஓடியிருந்தாலும், வேதாகமத்தில் ஒரு கதாபாத்திரமான யோபு, தேவன் அவருக்கு பல துன்பங்களை அனுமதித்தப்பொழுதும் அவர் தேவனைவிட்டு விலகவில்லை. அவருக்கு இவ்வளவு கசப்பான அனுபவம் வருவதற்கு தேவன் ஏன் அனுமதித்தார் என்பதே அவருடைய முதன்மையான கவலையாய் இருந்தது. இந்த தேவனின் திட்டத்தைப் புரிந்துகொள்வதே அவருடைய தேடலாய் இருந்ததாக யோபுவின் புத்தகம் சான்று பகற்கின்றது. அதற்கு பிறகு யோபு நோய்வாய்ப்பட்ட போது அவருடைய மூன்று நண்பர்கள் அவருக்கு ஆறுதல் கூற வருகிறார்கள். அவருடைய இந்த அனுபவம் முடிந்த பிறகு யோபுவால் இவ்வாறு கூற முடிந்தது யோபு 42:5. இதேபோல் தான் இந்த மனுக்குலத்திற்கு நடைப்பெறும். துன்பத்தினாலும், மரணத்தினாலும் நிகழ்ந்த கசப்பான அனுபவங்கள் நிறைவுற்ற பின், அவர்கள் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த பின், அவர்கள் தேவனைப்பற்றிய தவறான கருத்துக்களை திருத்திக் கொள்வார்கள். தங்கள் வாழ்வை மீட்கும்பொருட்டு, மிகுந்த கருணையோடு, மிகுந்த முன்னேற்பாடோடு தனது ஒரே மகனை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, உலகை தேவன் மீட்டார் என்ற உண்மையை அறிந்துகொள்வார்கள்.

ஆறாயிரம் வருடங்களுக்கு மேலாக, மனுக்குலம் தீமையில் மூழ்கியுள்ளது. கீழ்ப்படியாமையினால் ஏற்படும் பின் விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மரணம் எனும் விதை எல்லோர் மேலும் விதைக்கப்பட்டுள்ளது. உடலிலும், மனதிலும் ஏற்பட்டுள்ள வியாதிகளால் கோடானகோடி தளர்ச்சிகள் எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது. அதிலிருந்து இளைஞரோ, முதியவரோ தப்ப இயலாது. காலங்காலமாய், எதிரியான மரணத்தின் காரியங்களில், தேவன் தலையிடவில்லை. இதனைக்குறித்து பவுல் கூறுகையில், "தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடானசிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்"(ரோ. 1:28). மனுக்குலம் தேர்ந்தெடுத்தப் பாதை சுயநலமானதாயும், பாவமாயும் இருந்தாலும் தேவன் அவனை கட்டுப்படுத்தவில்லை.

ஆனால், தேவனின் திட்டம், மனிதன் மரணத்தில் விழுந்துகிடப்பதோடு மட்டும் முடிந்துவிடவில்லை. இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மனுக்குலம் முழுவதையும் மரணத்திலிருந்து உயிர்த்தெழச் செய்து நித்தியவாழ்வு அளிக்க வல்லவராய் இருக்கிறார். பவுல் எழுதுகையில், "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி. 15:21-22). இயேசு கிறிஸ்துவின் மரணத்தாலும், உயிர்த்தெழுதலினாலுமே நமக்கு இந்த நித்திய வாழ்வு கிடைத்தது. "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்" (யோவா. 6:51). "இதற்காகவே இயேசு ஒரு மனுஷனாக உலகத்தில் பிறந்தார்" (எபி. 2:9, 14).

"சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" (சங். 30:5). நம் முதல் பெற்றோரின் கீழ்ப்படியாமையால்தான், பாவம், துயரம், வெறுப்பு, மரணம் போன்றவை துவங்கியது. மனிதனிடம் விளங்கிய வெறுப்பு, கொலை, ஊழல் போன்ற காரியங்களால் தான் கசப்பான இந்த துயரங்கள் அவன் மேல் சுமத்தப்பட்டது.

ஆனால், ஆர்ப்பரிக்கும் விடியல் ஒன்று மனிதனுக்கு உண்டு. சுகமாக்கும் இறக்கைகளைக் கொண்ட நீதியின் சூரியன் அதனை நமக்குக் கொண்டுவரும். "என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் "நீதியின் சூரியன் உதிக்கும்; "அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்" (மல். 4:2). இந்த நீதியின் சூரியன், மகிமையான இயேசு கிறிஸ்து தான் (அப். 3: 19-21).

கிறிஸ்துவின் இந்த நன்மை பயக்கும் ஆட்சி எல்லோர் இருதயத்தையும் மாற்றும். "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 31:33).கிறிஸ்துவின் இராஜ்யத்தைப் பற்றி ஏசாயா கூறுகையில் "தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசா. 9:7). மனிதன் தன் இருதயத்தில், தன் சக மனிதனுக்கு வெறுப்பிற்குப் பதிலாய் அன்பை பொழியும் அந்த நாளை எதிர்நோக்கி இருப்போம்.